ஓம் சாந்தி

# சிவராத்திரியும்

# 12 ஜோதிர்லிங்கங்களின் மகிமையும்




பிரஜாபிதா பிரம்மா குமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம்

தமிழக தலைமையகம்: சாந்திதாம், Q-96, 3வது அவின்யு, அண்ணாநகர், சென்னை - 40

# 12 ஜோதிர்லிங்க சிவஸ்தல மகிமை

## சோமநாத் - (குஜராத்)



ஜோதிர்லிங்க வழிபாட்டுத் தலங்களில் முதன்மையானது சோமநாத். இந்த ஜோதிர் லிங்கத்தை பிரதிஷ்டை செய்து சந்திர பகவானை வேண்டி தவம் செய்ததாகக் கூறப்படுகிறது. இறைவனும் அவரது தவத்தை மெச்சி வரமும் அளித்தார். எனவே தான் இந்த லிங்கம் சந்திரன் பெயரால் (சோம-சந்திரன்) என வழங்கி வருகிறது. இந்த ஜோதிர் லிங்க தரிசனத்தின் மூலமே மனிதர்கள் அனைத்து பாவங்களிலிருந்தும் விடுதலை பெறுகிறார்கள். மேலும் மனம் நிறைந்த பலன்களை அடைந்து, மரணத்திற்குப் பின் சொர்க்கத்தையும் அடைவதாகக் கூறப்படுகிறது. அரபிக்கடல் ஓரத்தில் இக்கோவில் அமைந்திருப்பது சிறப்பு அம்சமாகும்.

இந்த பிரசித்தி பெற்றகோவில் மீது தான் கஜினி முகம்மது 17 முறை படை எடுத்ததாக சரித்திரம் கூறுகிறது. இக் கோவிலானது சுதந்திர இந்தியாவின் அந்நாளைய உள்துறை அமைச்சர் திரு. வல்லபாய் பட்டேல் அவர்களின் பரிந்துரையின் பேரில் இந்திய மக்கள் ஒத்துழைப்புடன் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

இத்தலம் சைவம், வைஷ்ணவம் இரண்டும் போற்றப்படும் திருத்தலமாகும். இங்கு தான் ஸ்ரீ கிருஷ்ணர் இறுதியில் ஜரா என்னும் வேடனின் அம்பு பாய்ந்து உடலை விட்டதாகவும் கூறப்படுகிறது.

புராதன பழைய இக்கோவிலானது 1783ல் இந்தூர் மகாராணி அகல்யாபாய் மூலம் நிர்மாணிக்கப்பட்டது. ஒருமுறை பகவான் அகல்யா தேவியின் கனவில் வந்து நான் இங்கு தான் இருக்கிறேன், இங்கு எனக்கு கோயில் எழுப்பு என கூறியதாகவும், அதன் பேரில் அங்கு தோண்டப்பட்டபோது கிடைத்த சுயம்புலிங்கம் தான் இக்கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இக்கோவில் சாயங்காலம் (மாலை வேளையில்) அலங்காரத் திற்குப் பின் செய்யப்படும் பூஜை மகத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இங்குள்ள திரிவேணி சங்கமம் கீர்த்தி பெற்றதாகும். இங்கு கபிலா, சரஸ்வதி மற்றும் ஹிரண்யா ஆகிய மூன்று நதிகள் கடலோடு கலக்கும் இவ்விடத்தில் யாத்ரீகர்கள் புனித நீராடுகின்றனர்.

ஆன்மீக விளக்கம்: சோமநாத் என்றால் ஜீவாத்மாக்களுக்கு ஆன்மீக ஞானம் எனும் சோமரசத்தை அளித்து அவர்களுக்கு முக்தி, ஜீவன் முக்தி அடையும் வழியை காட்டியவர் என்பதால் சோமநாதர்.

## மல்லிகார்ஜுனர் (ஸ்ரீசைலம் - ஆந்திரா)



ஆந்திர பிரதேசத்திலுள்ள ஸ்ரீசைலம் கடல் மட்டத்திலிருந்து சுமார் 1500 அடிகள் உயரத்திலுள்ள சிவஸ்தலமாகும். பிற ஸ்தலங்களில் சிவ பார்வதி தரிசனம் ஒன்றாக இருக்கும்போது இங்கு மட்டும் அமாவாசையன்று சிவன் வருகையும், பௌர்ணமி தினத்தன்று அம்மையின் வருகையும் இருப்பதாக சிவபுராணம் கூறுகிறது. இங்குள்ள லிங்கத்தை பூஜிப்பதால் மனோ ஆசைகள் பூர்த்தியடைவதாகவும், துக்கம், கவலைகள் முடிவுக்கு வருவதாயும், செல்வம் கொழிக்கும் எனவும் கூறப்படுகிறது. இறப்பிற்குப் பின் நேரடி மோட்சம் கிடைப்பதாகவும் ஐதீகம். இங்குள்ள மூலவர் 8 அங்குல உயரத்தில் சுயம்பு லிங்கமாகக் காட்சியளிக்கிறார். இந்த ஸ்தலத்தில் ஜோதிர் லிங்கம் என்ற பெயரில் 11 வேறு கோயில்களும் உள்ளன. இக் கோயிலுக்குப் பின்னால் சிறிய குன்றின் மேல் பார்வதி அம்மன் கோவில் ஒன்றும் உண்டு. இத்தேவி இங்கு மல்லிகாதேவி என அழைக்கின்றனர். இங்குள்ள சிவனின் பெயர் அர்ஜுனன். எனவே தான் இங்குள்ள மூலவரை மல்லிகார்ஜுனர் என்றழைக்கப்படுகிறது.

கோவிலருகே ஓடும் கிருஷ்ணா நதியை பாதாள கங்கை என்றழைக்கின்றனர். இங்கிருந்து தான் கோவிலின் லிங்க அபிஷேகம் நடை பெறுகிறது. விநாயகருக்கும் முருகனுக்கும் ஏற்பட்ட ஞானப்பழ விவாதத்தில் கோபம் கொண்டு தென் புலம் வந்த முருகனைத் (கார்த்திகேயன்) தேடிக் கொண்டு தென்புலம் வருகையில் சிவனும் பார்வதியும் சிவசைல மலையில் வந்திறங்கிய தாகவும், அதற்குள் முருகன் பழனியில் குமாரசுவாமியாய் தரிசனம் அளித்த தாகவும் ஸ்தலபுராணம் கூறுகிறது. (இவ்வாறு தான் முருகன் தமிழ்க் கடவுள் ஆனார் போலும்)

ஆன்மீக விளக்கம்: அனைத்து ஆத்மாக்களின் தந்தையான பரமாத்மா தன் குழந்தைகளாகிய ஜீவாத்மாக்களுக்கு தன்னுடைய உண்மையான ஜோதி சொரூபத்தை உணர வைத்து அவர்களை மீண்டும் மாயையை வென்ற அர்ஜுனர்களாக மாற்றிய தால் பக்தியில் இறைவனை மல்லிகார்ஜுனர் என அழைத்து மகிமை பாடுகின்றனர்.

## மகாகாளேஸ்வர் (உஜ்ஜயினி, மத்திய பிரதேசம்)



உஜ்ஜயின் என்றும் அவந்திகா என்றும் அழைக்கப்படும் நகரம் சிப்ரா நதிக்கரையோரம் அமைந்துள்ளது. இந்த நதி பகவான் விஷ்ணுவின் சரீரத்திலிருந்து உற்பத்தியாவதாக நம்பப்படுகிறது. மகாராஜா விக்ரமாதித்தனுடைய ஆட்சிக் காலத்தில் உஜ்ஜயினி பாரதத்தின் தலை நகராக விளங்கிற்று. ஸ்ரீ கிருஷ்ணர் பரசுராமர், சுதாமா ஆகியோர் இங்கிருந்த மகரிஷி சாந்திபரியின் ஆஸ்ரமத்தில் தான் குருகுல வாசம் புரிந்தனர் என்றும் கூறுப்படுகிறது. ஒவ்வொரு 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பிரகஸ்பதி கிரஹம் சிம்ம ராசியில் வரும் போது வைகாசி விசாக மாதத்தில் இங்கு மகாமகம் நடைபெறுகிறது.

இரு பிரிவுகளாக வளர்ந்து நிற்கிறது மகாகாளேஸ்வர் கோவில். மேல் தளத்தில் ஓங்காரேஸ்வர் சிவலிங்கம் பிரதிஷ்டையாகியுள்ளது. கீழ்ப்பகுதியில் மகாகாளேஸ்வரர் ஜோதிர்லிங்கம் அமைந்துள்ளது. இந்த சிவனை தரிசனம் செய்வதால் ஒருவருக்கு சொப்பனத்தில் கூட துக்கம் ஏற்படாது எந்தெந்த ஆசைகளுடன் யார் பூஜை செய்கின்றனரோ அந்த மனோ வாசைகள் பூர்த்தி யாகும் என்று கூறப்படுகிறது. கோவிலின் ஒருபுறம் சபா மண்டப மும், மறுபுறம் கோடி தீர்த்தமும் அமைந்துள்ளன. இங்கு பார்வதி, விநாயகர், கார்த்திகேயன் (முருகன்) சிலை வடிவங்களும் உள்ளன. சபா மண்டபத்தின் ஒரு மூலையில் அவந்திகா தேவியின் பழைய கோவில் ஒன்றும் உள்ளது. இத் தேவியை இந்த நகரைக் காக்கும் தேவியாக உள்ளூர் மக்கள் நம்பு கின்றனர். மகாகாளேஸ்வர் கோவிலைச் சுற்றி சிறிது சிறிதாக இன்னும் பல கோவில்களும் உள்ளன.

ஆன்மீக விளக்கம்: இக்கலியுகத்தின் இறுதியில் அவதரித்து அனைத்து ஆத்மாக்களுக்கும் முக்தி அளித்து அவர்களை தன்னுடன் சாந்தி தாமத்திற்கு (முக்தி தாமம். ஆத்மலோகம்) அழைத்துச் செல்வதால் இவரை மகாகாலேஸ்வரர் என அழைக்கப்படுகிறார்.

## ஓங்காரேசுவரர் (மத்திய பிரதேசம்)

இங்குள்ள சிறப்பு யாதெனில், ஓம்காரேசுவரர் மற்றும் பரமேஷ்வர் என்னும் இரண்டு ஜோதிர்லிங்கங்கள் உண்டு. அமலேஷ்வர் என்கிற வேறு பெயரும் உண்டு. இக்கோவிலுக்கு சற்று தூரத்தில் நர்மதை நதி இரண்டாகப் பிரிந்து பெருக்கெடுத்து ஓடுகிறது. பிறகு சற்று தூரத்தில் மீண்டும் ஒன்றாக இணைந்து விடுகிறது. இடைப்பட்ட தீவுப் பகுதியில் தான் இத் திருத்தலம் அமைந்துள்ளது. இரண்டாகப் பிரிந்தோடும் போது ஒன்று நர்மதா எனவும், மற்றொன்று காவேரி எனவும் அழைக்கப் படுகிறது. இத்தீவில் தான் மகாராஜா மாங்கதன் இறைவனை வேண்டி நின்றதாகவும், அதற்கு இறைவன் காட்சியளித்து அருள் புரிந்ததால் அவரது பெயரே இத் தீவிற்கும் சூட்டப்பட்டு மாங்கத தீவு என்றழைக்கப்படுகிறது. மூன்று பாகங்களாகப் பரந்து கிடக்கும் புண்ணிய தலத்தின் முதல் பாகம் பிரம்மாபுரி என்று அழைக்கப்படுகிறது. இங்கு பிரம்மேஷ்வர், ஜோதிர் லிங்கம் போன்ற கோவில்கள் அமைந்துள்ளன. இரண்டாவது பாகத்தில் விஷ்ணு கோவில், கடைத்தெரு, போன்றவை அமைந்துள்ளன விஷ்ணுபுரி. மூன்றாவது ஓங்காரேஷ்வர் கோவில் அமைந்திருக்கும் மாங்கத தீவு. இத்தீவிற்குச் செல்ல பாலமும் உள்ளது. படகுகளிலும் செல்லலாம்.



இங்கு தவழ்ந்து ஓடும் நர்மதா நதி ஏழு புண்ணிய நதிகளில் சிறப்பான தாகும். இந் நதியைப் பார்த்தாலே புண்ணிய சக்தி சேர்ந்துவிடுவதாகக் கூறப்படுகிறது. இந்த மாங்கத தீவுத்துறையில் புண்ணிய நீராடுவது மேலும் சிறப்பாகக் கருதப்படுகிறது. இத்தீவில் தான் ஓங்காரேஷ்வர் சிவன் கோவில் அமைந்துள்ளது. இத்திருக்கோவில் 5 கண்டங்களைக் கொண்டதாக உள்ளது. ஒவ்வொரு கண்டத்திலும் ஒவ்வொரு தேவதையின் கோயில்

உள்ளது. அனைத்திற்கும் கீழே ஓங்காரேஷ்வர் சிவலிங்கம் அமைந்துள்ளது. அதைச் சுற்றி சதா நீர்தேங்கியுள்ளது. சிவலிங்கத்தின் தென்புறத்தில் அர்த்தநாரி- பார்வதி தேவியின் திரு உருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

இக்கோவிலில் கர்ப்பகிரஹம் தென் கோடி மூலையில் அமைந்துள்ளது. கோபுரத்தின் நேர் கீழே இல்லை. இங்குள்ள சிவலிங்கம் பூமியில் ஸ்திரமா யில்லை, முன்பு ஒருமுறை பூஜாரிகள் சிவலிங்கத்தைச் சுற்றி லிங்க பீடத்தை வெட்டி எடுத்துவிட்டு ஒரு கை ஆழத்திற்கு குழியை உண்டாக்கி விட்டனர். லிங்க பீடம் இருக்கையை தாங்கிக் கொள்ளும் வகையில் 3 இடங்களில் சற்று பாறையை விட்டு விட்டார்கள். இந்த மூன்று (சக்கை) நிலைகளின் மீது லிங்க பீடம் அமரும் படியாக வைத்துவிட்டனர். இந்த குழியில் சதா நீர் நிறைந்திருக்கும். இவ்வாறு தனித்து தொங்கும் நிலையிலிருப்பது இந்த சிவலிங்கத்தின் சிறப்பாகும்.

முன்பு ஒருமுறை விந்திய மலையின் அதிபதியான விந்தியநரேஷ் ஓங்கார பெயருடைய சிவனிருந்த இடத்தில் லிங்கத்தை உருவாக்கி 6 மாத காலம் கடும் தவம் புரிந்தான். அவருடைய தவத்தில் மகிழ்ச்சியுற்ற சிவபகவான் அவனுக்கு தரிசனம் தந்து வரம் கேட்குமாறு கூறினார். கேட்க வேண்டிய உசிதமான வரத்தை கேட்காமல் தாமதித்துக் கொண்டிருக்கும் வேளையில் தேவர்கள் அனைவரும் சிவனைத்தேடி அங்கே வந்துவிட்டனர். பூலோக நன்மையின் பொருட்டு அங்கேயே நிலையாய் அமர்ந்திட தேவர்கள் பூஜித்து நின்றனர். அப்போது ஓங்கார லிங்கமிருந்த இடத்தில் இரண்டு லிங்கங்கள் தோன்றின. ஒன்று ஓங்கார லிங்கமிருந்த அதே இடத்திலும், மற்றொன்று அமலேஷ்வர் என்னும் பெயரிலும் வழங்கலாயிற்று. இதன் பிறகு சிவலிங்கங்களைப் பூஜித்து விட்டு தேவர்கள் அவரவர் இடம் போய்ச் சேர்ந்தனர். பக்திப் பூர்வமாய் இந்த லிங்கங்களை வணங்குவோருக்கு அதிக பலன் கிடைப்பதோடு மறுபிறவியும் எடுப்பதில்லை என நினைக்கின்றனர்.

அடுத்து, சிற்பகலை நிறைந்த அமலேஷ்வர் என்றழைக்கப்படும் பரமேஷ்வர் கோவிலில் பரமேஷ்வர் பெயரில் சிவலிங்கம் உள்ளது. மிகப் பழமையானதும், கலை வடிவானதுமான இக்கோயிலின் சுற்றுப்பிரகாரத்தில் அனேக பிற கோயில்களும் உள்ளன. இதுபோக இத்தலத்தில் விஷ்ணு கோவில், கௌரி- சோமநாதர் ஆலயம், 15 கி.மீ. தொலைவிலுள்ள சீதை வாழ்ந்த வால்மீகி ஆஸ்ரமம் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

**ஆன்மீக விளக்கம்:** ஓம் எனில் ஆத்மா எனும் ஆன்மிக மந்திரத்தின் சத்தியமான அர்த்தத்தை எடுத்துணர்த்தி மனித வாழ்வில் ஒளி பெறச் செய்ததால் இப்பெயரால் சிறப்பிக்கப்படுகிறார்.

## வைத்யநாதேஸ்வரர் (பரளி, மகாரஷ்டிரா)



ஔரங்காபாத்திற்கு அருகில் பர்பானி ரயில் நிலையத்தருகில் பரளி வைத்திய நாதேஸ்வரர் கோவில் அமைந்துள்ளது. இங்குள்ள லிங்கமானது கைலாசத்திலிருந்து இராவணனால் கொண்டு வரப்பட்டது என்று கருதப் படுகிறது. இந்த லிங்கம் சிறு மலைக்குன்றின் உச்சியில் அமைந்துள்ளது.

இக்குன்றில் எவரது சடலம் எரியூட்டப்படுகிறதோ அவர்கள் நேரடியாக மோட்சம் செல்வார்கள் என்று கூறப்படுகிறது. எனவே பெருவாரியான மக்கள் தங்கள் உறவினர்களின் சடலங்களை இங்கே கொண்டுவந்து தகன கிரியை செய்தனர். இந்த வழக்கம் சென்ற 100 ஆண்டுகளுக்கு முன்பு வரை இருந்து வந்தது எனவே இந்த தலம் தகன பூமியின் பேரால் மிகவும் பிரபல மடைந்துள்ளது. இதைப்பின்பற்றி பாரதத்தின் பிற நகரங்களிலும் கூட தகன பூமியில் சிவபெருமானின் கோவில் (சுடலை காப்பவர்) அமைத்துள்ளனர்.

விசாலமான இக்கோவிலுக்கு 40 படிகள் ஏறிச்செல்ல வேண்டும். மேற்கு வடக்கு திசைகளில் நுழைவாயில் அமைந்துள்ளன. கோவிலைச் சுற்றி இன்னும் பல சிறு சிறு கோவில்களும் உள்ளன.

**ஆன்மீக விளக்கம்:** காம, குரோத விகாரங்களினால் பாதிக்கப்பட்டு துக்கத்திலும், அசாந்தியிலும் வாழும் மனித ஆத்மாக்களுக்கு ஞான அமிர்தத்தை அளித்து அவர்களை நிரோகியாக, (நோய்ற்றவர்களாக) அமரர்களாக இறைவன் மாற்றுவதால் அவரை வைத்தியநாதன் என்ற பெயரில் ஞாபகார்த்தம் அமைக்கப்பட்டுள்ளது.

## பீமா சங்கர் (அருணாசலபிரதேசம்)

இக்கோவில் பழைய அஸ்ஸாமில் தென்புறத்திலுள்ள தற்போதைய அருணாசல பிரதேசத்தின் தேஜி நகரில் அமைந்துள்ளது. இப்பகுதியில் பீமாசங்கர் மற்றும் பிரம்மா குண்டம் (பரசுராம் குண்டம்) என்னும் இரண்டு புகழ்பெற்ற தீர்த்தங்கள் உள்ளன.


சிவபுராணம் கூறுவதாவது: கும்ப கர்ணனின் மனைவி கர்கட்டி என்னும் பெயருடைய இராட்சசிக்கு பீம் என்னும் புத்திரன் இருந்தான். தனது தந்தையைப் பற்றி அறிய ஆவல் கொண்டு தன் தாயிடம் கேட்கிறான். தனது தந்தையான இலங்கையின் ராஜன் கும்பகர்ணன் ஸ்ரீஇராமர் மூலம் வதை செய்யப்பட்டதை உணர்ந்தான். வெகுண்டு எழுந்து பழிவாங்க எண்ணினான். கடுந்தவம் புரிந்து பிரம்மாவிடமிருந்து எவரும் வெல்ல முடியா பலத்தைப் பெற்றான்.



இதன் பிறகு தேவலோகம் சென்று இந்திரன் முதலியோரை வென்று அரியணையிலிருந்து அகற்றினான். மேலும் பூமியிலுள்ள வேந்தர்களையும் வெல்லும் பொருட்டு கமரூப இராஜாங்கத்தின் காரூபேஸ்வர் இராஜாவோடு கடும் யுத்தம் புரிந்தான். பிரம்மாவின் வர சக்தியால் காரூப அரசனை வென்று சிறைப்படுத்தினான். சிவ பக்தரான காமேஸ்வரன் சிறையிலும் ஆழ்ந்த சிவ பூஜையில் ஈடுபட்டான். மண் பூஜையில் ஈடுபட்டுள்ள அவரை கடும் வார்த்தைகளால் சுட்டெரித்தான். தானே தேவர்களை விட உயர்ந்தவன் என்றும் தன்னைத் தான் வழிபட வேண்டும் எனவும் கூறினான். அவ்வாறு செய்ய மறுத்த இராஜனை வாளால் வெட்ட முற்பட, அச்சமயத்தில் சிவ பெருமான் வெளிப்பட்டு தனது சூலத்தால் பீமசூரனை வதம் செய்தார். அந்த சாம்பலிலிருந்து அநேக காரியங்களுக்கு பயன்படும் மருந்து வகைகள் உற்பத்தியாயின என்றும், பூதம், பேய், பிசாசு போன்றவைகளை விரட்ட வல்லது என்றும் கூறப்படுகிறது.

தேவர்கள், முனிவர்கள், மக்களுடைய பாதுகாப்பின் பொருட்டு யுத்தம் செய்யாதோருக்கும் துன்பம் விளைவிக்கக் கூடிய இந்த மண்ணில் தாங்கள் அவசியம் இருந்து காத்தருள வேண்டும் என்கிற பிரார்த்தனையின் பேரில் பீம சங்கர் பெயருடன் பிரசித்த மடைந்தது இத்தலம்.

**ஆன்மீக விளக்கம்:** விகாரம் என்னும் அரக்கர்களிடம் அடிமையுற்று இருக்கும்போது அவ்விகாரத்தை அழித்து ஆத்மாக்களுக்கு உண்மையான விடுதலை அளிப்பதால் இப்பெயரால் இறைவன் புகழ் பாடப்படுகிறார்.



## இராமநாதசுவாமி (இராமேஸ்வரம் - தமிழ் நாடு)



பாரதத்தின் நான்கு திசைகளின் இறுதி மூலையில் ஒன்றான தெற்கு ஓரத்தில் அமைந்திருக்கும் திருத்தலம் இராமேஸ்வரம், இக்கோவில் சதுரமாக வடிவமைக்கப்பட்டு நான்கு புறங்களிலும் கோபுரங்கள் உள்ளன. இதன் சுற்றுப் பிரகாரத்தில் வரிசையாக கற்தூண்களும், கூரையில் அமைக்கப் பட்டுள்ள சித்திரங்களும் மிகவும் வேலைப்பாட்டுடன் கூடியவை. இதன் பிரகாரத்தின் மொத்த நீளம் 1 கி.மீ. தூரமாகும். சில காலங்களுக்கு முன் இராமேஸ்வரத்திற்கும் பாரத பூமிக்கும் இடையேயுள்ள பூமி கடலுக்கு அடியில் சென்று விட்டதால் இராமேஸ்வரம் தீவாகி விட்டது.

ஸ்ரீ இராமர் பூஜித்த ஈஸ்வரர் என்பதால் இராமேஸ்வரம் என பெயர் பெற்றது. பிரதான மூர்த்தி இராமநாத சுவாமி என்றழைக்கப்படுகிறார். இந்த லிங்க மூர்த்திக்கு கங்கா அபிஷேகம் செய்வித்து, இத்தலத் திலுள்ள மண்ணை எடுத்து கங்கையில் கரைப்பது விசேஷம். எனவே தான் வடநாட்டு யாத்ரீகர்கள் அனேகம் பேர் இங்கு வரக்காணலாம்.

· இராமாயண இதிகாசத்தில் ஸ்ரீ ராமர் இராவணனை வதம் செய்து விட்டுத் திரும்பி வரும்போது இராவணனின் சூட்சும சரீரம் இராமரைத் தொடர்ந்து வந்ததால் அவருக்கு பிரம்மஹத்தி தோஷம் ஏற்பட்டது. எனவே மகரிஷிகள் ஸ்ரீ ராமரை சிவலிங்க பிரதிஷ்டை செய்து பூஜிக்க வேண்டினர். அவ்வாறே ஸ்ரீ ராமர் அனுமானை வடக்கிலிருந்து இரண்டு சிவலிங்கங்களை கொண்டு வரப் பணித்தார். அனுமான் வரத்தாமதமானதால் ஸ்ரீ சீதை மணலைக் கொண்டு லிங்கம் வடிவமைக்க அதை ஸ்ரீ ராமர் பூஜித்தார். இதுவே ஸ்ரீ இராமலிங்க பிரதிஷ்டை எனப்படுகிறது.

இதற்கிடையில் வடதிசையிலிருந்து 2 லிங்கங்களை எடுத்துக் கொண்டு அனுமான் வந்து சேர்ந்தார். மணல் லிங்க பூஜை நடை பெற்றதைக் கண்ணுற்று கோபங்கொண்டார். தனது வாலால் அதனை அகற்ற முயன்றார். ஆனால் வால் தான் அறுந்தது அவர் அகந்தையும் மறைந்தது. ஸ்ரீராமர் அனுமானை நோக்கி இரு லிங்கங்களில் ஒன்று காசி விஸ்வ நாதராக பிரதிஷ்டை செய்து முதல் பூஜை இதற்கே என்று கூறினார். மற்றொரு லிங்கத்தை அனுமான் பூஜை செய்யலாம் என்று கூறினார். இன்றைக்கும் முதல் பூஜை காசி விஸ்வநாதருக்குத்தான்; இரண்டாவது லிங்கம் அக்கோயில் முகப்பில் அனுமான் சன்னதியிலுள்ளது.

இங்குள்ள மிக விசேட 22 தீர்த்தங்களிலும் நீராடவில்லையெனில் இராமேஸ்வர யாத்திரை நிறைவு பெறாது என்றே கூற வேண்டும். இறுதி தீர்த்தமான கோடி தீர்த்தத்தில் நீராடிய பிறகே சுவாமி தரிசனம் செய்ய வேண்டும் என்பது ஐதீகம்.

**ஆன்மீக விளக்கம்:** அனைத்து தேவ ஆத்மாக்களாலும் பூஜிக்கக் கூடியவர் மகா தேவ் பரமாத்மா சிவன் என்பதை ஸ்ரீ இராமர், ஸ்ரீ சீதாதேவி இவர்கள் மூலம் உணர்த்தப்படுகிறது

# நாகேஸ்வரர் (குஜராத்)



முன்னொரு காலத்தில் தாருகா வனத்தில் தாருகா என்னும் ராட்சசி வாழ்ந்து வந்தாள். அவள் பார்வதி தேவியிடம் தனக்கு எங்கு விருப்பமோ அங்கு தனது காடு, மலைகளோடு சென்று வாழும் சக்தியைப் பெற்றுக் கொண்டாள். அதன் பிறகு அங்கங்கு சென்று வாழ்ந்து கொண்டு மக்களுக்கும் தொந்தரவு அளித்து வந்தாள். அவளது கணவன் தாருகன் மற்றும் அவனது படைகளும் மக்களுக்கு மிகுந்த கஷ்டத்தை அளித்து வந்தனர். அப்பாவி மக்களைப் காப்பாற்றும் பொருட்டு தேவர்கள் போர் தொடுக்கவந்தனர். இந்த பயத்தால் ராட்சசி கடற்கரை ஓரம் தனது காடுகளை எடுத்துச் சென்று வாழ்ந்து வரலானாள். அங்கும் கூட கடலில் படகுகளில் செல்லும் மக்கள் துன்புறுத்தப் பட்டனர். ஒருமுறை வணிக மக்களை ஏற்றிக் கொண்டு பல படகுகள் அவ்வழியே வந்தன. அவைகளைப் பிடித்து அதிலிருந்தவர்களை யெல்லாம் ஒரு குகையில் போட்டு அடைத்து விட்டனர். அந்த படகு களின் எஜமானன் சுப்பிரியன் ஆழ்ந்த சிவ பக்தன். அவனும், கூட இருந்த அனைவரும் சிவனை சிரத்தையுடன் ஆராதித்தனர்.

இந்த பக்தியைக் கேள்வியுற்ற இராட்சச படையினர் இவர்களை அழிக்கும் பொருட்டு அங்கே வந்து துன்புறுத்த ஆரம்பித்தனர். பக்தர்களின் கஷ்டங்களைக் காணப்பிடிக்காத பரமன் அங்கே தோன்றி அப்படைகளை அழித்தார் என்பது புராணக் கதை. பக்தர்களின் அன்பு வேண்டுகோளின் பேரில் நிரந்தரமாய் அங்கு வசிக்கலானார். இங்கு மூலவர் நாகேஸ்வரர் என்றும் பார்வதி தேவி நாகேஸ்வரி என்றும் பூஜிக்கப்படுகின்றனர். இன்று இந்த ஜோதிலிங்கம் சிந்து பிராந்திய பாகிஸ்தானின் தலைநகரான கராச்சியில் கவர்னர் மாளிகைக்கு அருகில் கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ளது. ஒரு நடை பாதை பாலத்தின் மூலமே இக்குகையைச் சென்றடைய முடியும். பாகிஸ்தான் பிரிவிற்குப் பின்அங்குள்ள இந்துக்கள் இங்கு ஒரு பிராமணருக்கு தங்க இடவசதி செய்து கொடுத்து அன்றாட பூஜை செய்யக் கூறிவந்துள்ளனர். இக்குகையில் தான் முன்பு சுப்பிரிய வணிகரும் பிறரும் அடைக் கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. தற்போது இச்சிற்ப கலைநயம் கொண்ட இக்கோவில் குஜராத் மாநிலத்தில் துவாரக எனும் இடத்தில் அமைந்துள்ளது.

**ஆன்மீக விளக்கம்:** கலியுகத்தில் மனித ஆத்மாக்களிடத்தில் இருக்கும் விகாரங்கள் எனும் நாகங்களை ஞான, யோக சக்தியால் அழித்து அவர்களுக்கு உண்மையான சுகத்தை அடைவதற்கான வழி காட்டினார் என்பதே இப்பெயருக்கு காரணமாகும்.

# காசி விஷ்வநாத் (வாரனாசி - உத்திர பிரதேசம்)

பாரதத்தின் அனைத்து தீர்த்த ஸ்தலங்களிலும் தலை சிறந்தது காசி, முக்தி க்ஷேத்திரம், காசி, வாரணாசி என்று பல பெயர்கள் இதற்கு உண்டு. இப்புனித ஸ்தானத்தில் இயற்கை எய்துவோருக்கு நேரடியாக முக்தி கிட்டும் என்ற நம்பிக்கை இருப்பதன் காரணமாக அவர்களே காசிக்கு வந்து மரணமடைகின்றனர் என்றும் கூறப் படுகிறது.


பரமாத்மா சிவன் இந்த புனித ஸ்தலத்தை தனது திரிசூலத்திலிருந்து நேரடியாகப் படைத்தார் எனவும், பிறகு பிரம்மாவுக்கு உலக சிருஷ்டியை ஆரம்பிக்குமாறு கூறியதாகவும், சிவ புராணம் கூறுகிறது. இந்த பூமி கர்மத்தின் தீய கணக்கினை அழிக்கக்கூடியது எனவும் இவ்வாறு அனைவருக்கும் முக்தி அளிக்கக் கூடிய சிவலிங்கத்தை பரமன் சிவனே படைத்ததாகவும் கூறப்படு கிறது. உலகத்தையே படைக்கும் காரியத்தைச் செய்வித்ததால் அங்குள்ள லிங்கமே விஷ்வநாத் என்றழைக்கப்படுகிறது. இந்நகரம் புராண கல்வி கலாச்சாரத்துக்கு மிகவும் பெயர் பெற்றது. கல்வியும், புலமையும் மிக்க வித்வான்களும், பண்டிதர்களும் நிறைந்த பூமி காசி. காசியின் பண்டிதர்கள், வித்வான்களின் ஆலோசனையின் பேரில் தான் மத்திய, மாநில அரசுகள் தமது ஆண்டு விடுமுறை நாட்களை நிர்ணயிக்கின்றன.

இப்புனித ஸ்தலம் கங்கைக் கரையின் ஓரத்தில் அமைந்திருப்பது மேலும் சிறப்புக்குரியது. அதிசங்கமதுறை, தசாவங்க மேத துறை, மணிகார்ணிகா துறை, பஞ்சகங்கா துறை மற்றும் வருணா சங்கம துறை என முக்கியமான கங்கை படித்துறையில் பல லட்சக்கணக்கான மக்கள் புனித நீராடுகின்றனர்.

ஆன்மீக விளக்கம்: சொர்க்கம் எனும் புதிய உலகத்தைப் படைக்கும் காரியத்தை சிவன் செய்வதால் இங்கு அமைந்துள்ள லிங்கத்தினை விஷ்வநாதர் என்று அழைக்கப்படுகிறது



## திரியம்பகேஸ்வரர் (மகாராஷ்ட்ரா)




மகாராஷ்ட்ரத்தில் நாசிக் ரோடு அருகில் பிரம்மகிரி மலையில் கோதாவரி நதி உற்பத்தியாகும் இடத்திற்கு அருகில் இக் கோவில் அமைந்துள்ளது. முன்னொரு காலத்தில் கௌதம முனிவரின் தவப் பயனாக கங்கை நதியின் பிரவாகம் ஒரு வகை அத்திமரத்தின் கிளையிலிருந்து உற்பத்தியானது. அவரும் அவரது சீடர்களும் அதில் நீராடி மகிழ்ந்தனர். அதன் பிறகு அவ்விடம் கங்காதுவார் என பிரபல மடைந்தது. கௌதம முனிவரின்பால் பொறாமை கொண்ட முனிவர்கள் அங்கு நீராடச் சென்றபோது அந்த அருவி மறைந்து விட்டது. கௌதம முனிவரின் வேண்டு கோளுக்கிணங்க திரும்பவும் கங்கை பிரவாகமெடுத்து ஓடியது. அச்சமயத்தில் சிவபெருமான் மற்றும் தேவர்கள் வந்திறங்கினர். அவர்கள் அனைவரும் கங்கைத் தாயை அங்கேயே இருக்க வேண்டிக்கொண்டனர். மேலும் இன்று முதல் அந்நதி கௌதம முனிவரின் பெயரால் அதாவது **கோதாவரி** என்னும் புதுப் பெயரால் புகழ் பெறும் என ஆசி வழங்கினார். புனித கங்கை மற்றும் தேவாதி தேவர்கள், ரிஷி முனிகள் வேண்டு கோளின்படி சிவபெருமான் **திரியம்ப கேசுவரர்** என்னும் பெயரால் கோயில் கொண்டார்.

இக்கோவில் மிகப்பெரிய நிலப்பரப்பில் நாலாபுறமும் மிக உயர்ந்த மதில் சுவர்களுடன் உள்ளன. உள்பிரகாரத்தில் மூன்று லிங்கங்கள் உள்ளன. இவை பிரம்மா, விஷ்ணு, சங்கரின் பிரதிமைகள் என்று கூறப்படுகின்றன. இந்த ஜோதிர்லிங்கங்களைத் தொட்டு வணங்குவது தடை செய்யப்பட்டுள்ளது. கோயில் வளாகத்தில் அமிர்த குண்டம் என்னும் பெயரால் புஷ்கரணி (திருக்குளம்) உள்ளது. அதிலுள்ள நீரால் பகவானுக்கு அபிஷேகம் செய்யப் படுகிறது. இது தவிர அங்கு சங்க மேஸ்வரர், கண்கேஸ்வர், கபோஷ்வரா விசத்தியா தேவி, திரிபுவேனஸ்வர் போன்ற கோவில்களும் உள்ளன.

**ஆன்மீக விளக்கம்:** மனித ஆத்மாக்கள் இறைவன் அளிக்கும் மூன்று கால, மூன்று லோக ஞானம் எனும் கங்கையில் மூழ்குவதன் மூலம் ஆத்மாக்கள் தூய்மை அடைய முடியும் எனும் ஆன்மீகச் சிறப்பை விளக்குவதாகும். இங்கு சிவன் திரியம்பகேஷ்வரராக பூஜிக்கப்படுகிறார்.

## கேதார்நாத் (உத்திரகாண்டம், உத்திர பிரதேசம்)



பன்னிரு ஜோதி தலங்களிலும் இயற்கையின் எழில் சூழ்ந்த அழகுமிக்க தலம் கேதார்நாத் ஆகும். மந்தாகினி நதிக்கு வலப்புறத்தில் அமைந்துள்ள இத்தலத்தைச் சுற்றி மூன்று பக்கமும் மலைகளால் சூழ்ந்து காணப்படுவது கண்கொள்ளாக் காட்சி. இந்த இமாலய மலைத் தொடரிலிருந்து தான் மந்தாகினி நதி உற்பத்தியாகி ஓடி வருகிறது. இங்குள்ள கேதாரேஷ்வர் மற்றும் பத்ரி நாராயணரை பக்தி சிரத்தையுடன் வழிபடுவோருக்கு வாழ்க்கையில் வரும் துன்பங்கள் விலகிப் போகும் மனோ வாசைகள் பூர்த்தியாகும் என சிவபுராணம் மகிமை பாடுகிறது. மேலும் இந்த யாத்திரையின் போது மரணம் எய்துவோருக்கு மோட்சம் நிச்சயம் என்றும் கூறப்படுகிறது.

மகாபாரத யுத்தத்திற்குப் பின் பாண்டவர்கள் இக்கோவிலைக் கட்டினர் என்று தல புராணம் கூறுகிறது. சபா மண்டபத்தில் கலை நுணுக்கங்களுடன் பல்வேறு, தேவி-தேவதைகளின் சித்திரங்களும் உள்ளன. இங்குள்ள மூலவரை பக்தர்கள் தமது கரங்களாலேயே அர்ச்சிக்க அனுமதியுண்டு. உத்தரகாண்ட யாத்திரையை முடித்துக் கொண்டு இங்கு வந்து சேர்கையில் தான் ஜகத்குரு ஆதி சங்கராச்சாரியார் பகவானுடன் ஒன்றாகக் கலந்து விட்டார் என்று கூறப்படுகிறது. கேதாரி நாத்திற்கு விஜயம் செய்யும், யாத்திரீகர்கள் மிக அவசியமாக நேபாளத்திலுள்ள பசுபதி நாத் மூலவரையும் சென்று தரிசிக்க வேண்டுமென்பது ஐதீகம். ஏனெனில் பரமனின் தலைப்பாகம் பசுபதி நாத் என்றும் பாதப்பகுதி கேதார்நாத் என்றும் கூறப்படுகிறது.

முன்பொருகாலத்தில் வாழ்ந்து வந்த நர் மற்றும் நாராயண் எனும் இரு ரிஷிகளின் வேண்டுகோளின் பேரில் மக்களின் நன்மைக்காக பகவான் இங்கே நிரந்தரமாகி விட்டார் என்று புராணக் கதைகள் கூறுகின்றன.

ஆன்மீக விளக்கம்: யாரொருவர் இறைவனடியில் தன்னுடைய மனம் புத்தியை அர்ப்பணித்து அவர் வழி நடக்கிறாரோ அவருடைய அனைத்து துன்பங்களும் நீங்கி, சுகமடைவர் என்பதன் அடையாளமாகவே இங்கு கேதார் நாத் எனும் இப்பெயரில் இறைவன் சிறப்பிக்கப்படுகிறார்.

## குகமேசம் (கிருஷ்ணேஷ்வர்) (மகாராஷ்ட்ரா)



வடமொழியில் குஷ்மேஷ்வர் என்றழைக்கப் படும் இத்தலத்தில் அருள்பாலிக்கும் ஈஸ்வரனின் பெயர் கிருஷ்ணேசுவரர் ஆகும். ஔரங்காபாத் மற்றும் தௌலதாபாத் நிலையங்களுக்கு அருகே இத்தலம் அமைந்துள்ளது. உலகப் புகழ் பெற்ற ஓவியங்கள் அமைந்துள்ள எல்லோரா குகைகளுக் கருகில் இக்கோவில் அமைந்துள்ளது. கோவிலில் மூலவராக சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ளது. வெளியே விநாயகர் மற்றும் முருகர் கோவில்களும் உள்ளன. அருகில் சிவாலயம் என்னும் புண்ணிய தீர்த்தமும் உள்ளது.

பழைய காலத்தில் தேவகிரி நகரில் சுதாமா என்னும் பிராமணன் தனது மனைவியுடன் வாழ்ந்து வந்தார். இருவருமே பக்தி சீலர்களாக விளங்கினர். ஆனால் அவர்களுக்கு புத்திர பாக்கியம் இல்லாதிருந்தது. எனவே அவரது மனைவி சுதேகா தனது தங்கை குஷ்மாவை குழந்தை பாக்கியத்தின் பொருட்டு தனது கணவனுக்கே மணம் முடித்து வைக்கிறாள். தங்கை தினமும் மண்ணால் செய்த 100 சிவலிங்கங்களை பூஜை செய்து அவைகளை புண்ணிய தீர்த்தத்தில் அர்ப்பணம் செய்து வந்தாள். பகவானின் கிருபையால் அவளுக்கு புத்திர பாக்கியம் கிட்டியது. ஆனால் இப்போதோ அவளது மூத்த சகோதரிக்கு பொறாமை ஏற்பட்டது. குஷ்மாவை புத்திரவதி எனவும், இவளை மலடி எனவும் பிறர் கூறியதை இவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இப் பொறாமை தீ அக்குழந்தையையே வெட்டி துண்டம் துண்டமாக்கி அதே குள தீர்த்தத்தில் கொண்டுபோய் போடுமளவுக்கு கொண்டு போய்விட்டது. இந்த செய்தியைக் கேட்ட பின்பும் கூட குஷ்மா ஒருபோதும் தனது மண்லி ங்க பூஜையை செய்து குளத்தில் கரைப்பதை விடவில்லை. அவ்வாறு ஒருமுறை புனித தீர்த்தக்கரையிலிருந்து திரும்பும் வேளையில் அவளது பிள்ளை உயிருடன் அத்தீர்த்தத்திலி ருந்து வெளி வந்ததைக் கண்டு மனமகிழ்ந்தாள். உடனே அவ்விடத்தில் பகவானின் திவ்ய தரிசனமும் அவளுக்குக் கிட்டியது. அவள் கேட்ட வரத்திற்கிணங்க பகவானும் மனித நன்மையின் பொருட்டு நித்ய காலமும் வசித்திட அருள் கூர்ந்தார். மேலும் அவர் கூறியதாவது: உனது பெயருக்கு பின்னாலேயே என் பெயரும் குஷ்மேஷ்வரர் என்று வழங்கப்பெற்று பிரசித்தி பெறும். மேலும் இந்த தீர்த்தமும் சதா ஜோதிர்லிங்கத்தின் இருப்பிடமாக விளங்கி சிறப்படையும் எனவும் கூறினார் .

**ஆன்மீக விளக்கம்:** நடைமுறை வாழ்க்கையில் சாரமற்று வாழ்ந்து கொண்டு இருக்கும் ஜீவாத்மாக்களை மீண்டும் ஞானத்தினால் விழிப்புணர்வு பெறச் செய்து அவர்களை அமரலோகம் செல்வதற்கு தகுதியுறச் செய்ததன் காரணத்தினால் இங்கு இறைவனுக்கு கிருஷ்ணேஷ்வரர் என்ற பெயரில் வழிபாடுகள் நடக்கின்றன.

நன்றி: பாரத் தீர்த்த தர்ஷன்

வெளியீடு: மாங்கலிக் பிரகாஷன், வாரணாசி

# சிவனும், சங்கரும்





பரமாத்மாவாகிய சிவன் நிராகாரமானவர். ஒளியாக விளங்குகின்றார் என்பதாலேயே சிவனை லிங்க ரூபமாக வழிபடுகின்றார். எனினும் பிற்காலத்தில் சிவனுடைய குணாதிசயங்கள் அல்லது அவரைப் பற்றிய அறிமுகத்திற்கு ஒரு ஸ்தூல வடிவம் கொடுத்தார்கள். கற்பனை மற்றும் பரம்பரைக் கதைகளின் அடிப் படையில் மக்களுடைய எதிர்பார்ப்புக்கு ஏற்ற வகையில் கல்லில் சிலையாக செதுக்கினார்கள், சித்திரமாக வரைந்தார்கள். பாடல்களையும் இயற்றினார்கள். ஆடிப்பாடி மகிழ்ந்தார்கள். நாளடைவில் இது மக்களுடைய நம்பிக்கைக்குரிய அங்கீகாரம் பெற்றுவிட்டது. காரணம், இது மத நம்பிக்கைகளின் தத்துவார்த்தமான பின்னணியைக் கொண்டிருந்தது தான். எனினும் இதன் உட்பொருளைப் பற்றி அறிந்து கொள்வதில் மக்கள் ஆர்வமில்லாதவர் களாகவே இருந்தார்கள். இவ்வாறாக, காலம் செல்லச் செல்ல, கடவுள் நம்பிக்கையானது ஸ்தூலமாக, உருவ வழிபாடாக, சடங்குகளாக ஆகிவிட்டது. உதாரணமாக இந்துமத நம்பிக்கையை எடுத்துக் கொள்வோம். சங்கர் ரிஷப வாகனத்தில் சவாரி செய்வதாகவும், அவருடைய கையில் சூலாயுதமும், உடுக்கையும்,தலையிலிருந்து கங்கையானது நீர்வீழ்ச்சி போல கீழே விழுவதாகவும், தாண்டவ நடனம் புரிந்ததாகவும் எழுதியிருக்கின்றார்கள். சித்திரமாகவும் தீட்டியிருக்கின்றார்கள். இவ்வாறெல்லாம் நடந்திருக்கும் என்று மக்கள் உறுதியாக நம்புகிறார்கள். ஆதலால் இதைப்பற்றி விளக்குவதும் அவசியமாகிறது.

## சிவன், சங்கராக அடையாளம் காட்டப்பட்டிருக்கின்றார்

சிவன் மனித உருக்கொண்டவரல்ல என்பதால் லிங்கமாக வடிவமைத்தார்கள் என்று பார்த்தோம். சிவனுடைய குணாதிசயங்களை மக்களால் புரிந்து கொள்ள முடியாது என்ற காரணத்தாலேயே, மனித உருவமும், இதரஅலங்காரங்களும், அடையாளமாக் காட்டப்பட்டிருக்கின்றன. உண்மையைப் புரிந்து கொள்ளாததால், சங்கர் தான் சிவன் அல்லது இரண்டும் ஒன்றே என்ற நம்பிக்கை நாளடைவில் உறுதியாகி விட்டது.

## சங்கருடைய உருவ அமைப்பை நினைவுக்குக் கொண்டு வருவோம்

முதன் முதலாக, சங்கர் திகம்பரமாக (ஆடையற்ற தோற்றம்) காட்சியளிக்கின்றார். திகம்பர் என்றால் எல்லா திசைகளையும் ஆடையாகக் கொண்டவர். இது சிவனுக்குப் பொருந்துகின்ற அடையாளமாகும். ஏனெனில் நிராகாரமாக இருக்கின்ற சிவனுக்கு ஸ்தூல சரீரமோ, அல்லது சூட்சும சரீரமோ இல்லை. சரீரம் என்பது ஆன்மீக அர்த்தத்தில் ஆத்மாவின் ஆடையாகக் கருதப்படுகிறது. ஆனால் சங்கர் நிராகாரமானவர் அல்ல. சூட்சும சரீரமுடையவர் . சூட்சும சரீரம் சங்கருக்கு உண்டு என்பதால், ஆடையும் இருக்க வேண்டும். திகம்பரமாகக் காட்டியிருப்பதால், இது சிவனையே குறிக்கும். நிராகாரமான சிவன் ஆன்மீக உணர்விலேயே இருப்பவர் என்பதை உணர்த்துவதாகவே இந்த அடையாளம் அமைந்துள்ளது என்று புரிந்து கொள்ள வேண்டும். மேலும் சுதந்திரமாக இருக்க விரும்புகின்ற ஆத்மா தன்னை அலங்கரித்துக் கொள்ளும் விருப்பமுடையதாக இருக்காது, ஆத்ம உணர்விலே தான் சதா இருக்க வேண்டும். சிவன் இப்படித்தான் இருக்கின்றார். இதைப் புரிந்து கொள்ளாத சாது சந்நியாசிகள் (குறிப்பாக நாகர்கள்) உற்சவ காலங்களில் ஆடையின்றி வலம் வரும் காட்சி ஏற்புடையதல்ல.

## சரீரம் முழுவதும் சாம்பல் பூச்சு

சங்கர் ஆடையற்றவராகக் காட்டப்பட்டு இருப்பதோடு மட்டுமல்லாமல் உடல் முழுவதும் சாம்பலால் பூசப்பட்டும் காட்சியளிக்கின்றார். இது பலனை எதிர்பாராது செயலாற்றுகின்ற வைராக்கியவிருத்தியை உணர்த்துவதாகும். மேலும் இக்காட்சி கவர்ச்சிக்கு அப்பாற்பட்டிருப்பதையும் குறிக்கின்றது. இதனை அறியாத சாது சந்நியாசிகள் தங்களுடைய உடல் முழுவதும் சாம்பலால் பூசிக் கொள்கின்றனர். இப்படிச் செய்வதால் கடவுள் திருப்தியடைவார் என்று இவர்கள் நம்புவதாகத் தெரிகின்றது.

## கழுத்தைச் சுற்றியிருக்கும் ஆதிசேஷன்

இந்திய இலக்கியப்படி, ஒரு வளையம் போல கழுத்தைச் சுற்றிக் கொண்டிருக்கும் பாம்பு, காலனையும், காலச் சக்கரத்தின் தொடர்ச்சியையும் குறிப்பதாக உள்ளது. பாம்பின் தலைப் பாகம் விநாசத்தையும், வால் பாகம் தொடர்ச்சியையும் காட்டும் அடையாளம் எனப்புரிதல்வேண்டும்.

## உச்சியில் முடிக்கப்பட்ட கொண்டையும், நீர் விழ்ச்சியும்

தலையில் காணப்படும் மூன்று முடிச்சுக் கொண்டையானது, இறை ஞானம், இராஜயோகம், தெய்வீக குணம் ஆகியவற்றின் அடையாளமாகும். தலையிலிருந்து விழும் கங்கை நீர் ஆத்மாவைத் தூய்மைப்படுத்தவும், ஆத்ம விடுதலைக்கும் உதவும் ஞான அமிர்தத்தைக் குறிப்பதாகும். இந்த உட்பொருளை அறியாத சாது சந்நியாசிகள் ஜடா முடியை வளர்த்துக் கொண்டு வலம் வந்து கொண்டிருக்கிறார்கள்.

## நான்கு கைகள், அழகிய முகம்

இரண்டு கைகள் பின்னும், இரண்டு கைகள் முன்னுமாகக் காட்டப்பட்டிருக்கின்றன. இந்நான்கு கைகள் நான்கு திக்குகளைக் குறிக்கும். அமைதி தவழும் அழகிய முகம்,

ஆத்மாவின் சாந்தி சொரூப நிலையையும், ஆனந்தத்தையும் பிரதிபலிக்கும் அடையாளமாகும்.

### திரிசூலம்



கையில் உள்ள திரிசூலம் உடல் ரீதியான நோய்கள், இயற்கை சீற்றத்தால் உண்டாகும் சேதங்கள், ஆன்மாவை பலவீனப்படுத்தும் விகார குணங்கள் என்ற மூன்றுவித துன்பங்களையும் நீக்கக் கூடியது என்பதைக் குறிக்கும். சிவன் இம் மூன்று வித துன்பங்களுக்கும், சதோ, ரஜோ, தமோ நிலைகளையும் கடந்து நிற்பவர். ஆதலால் சிவனுக்கு திரிகுணதித்தா என்ற பெயருமுண்டு. மேலும் தூய்மையின்மை, அமைதியின்மை, வறுமை ஆகியவற்றையும் விலக்கக்கூடியவர் என்பதன் அடையாளமாகும்.

### உடுக்கை



குடுகுடுப்பைக்காரன், கைக்கு அடக்கமாக ஒரு வாத்தியக் கருவி மூலம் குடுகுடுவென ஓசை எழுப்பிக் கொண்டு அதிகாலை வேளையில் தெருவில் குறி சொல்லிக் கொண்டே வருவான். இந்த குடுகுடுப்பையின் ஓசை மற்றவருடைய கவனத்தை ஈர்ப்பதாக இருக்கும். சிவன் ஆத்மாக்களைத் தூய்மைப்படுத்துவதற்கு அவசியமான ஞானத்தை அருளுவதற்காக எல்லோரையும் அழைக்கின்றார். எல்லோருடைய கவனத்தையும் தன்பக்கமாக ஈர்க்கின்றார் என்பதன் அடையாளமே உடுக்கை. இக்கருவியிலி ருந்து எழும் தொனியை பக்தர்கள் நாதம் என்கின்றனர். இது எல்லா எழுத்துக்களின் உச்சரிப்பைஉணர்த்துகிறது என்று கூறுகின்றனர். இதன் பொருள் மற்றெல்லா நூல்களுக்கும் இறைவன் அருளுகின்ற ஞானமே, விதை போன்ற ஆதாரமாக இருக்கிறது என்பதாகும்.


### தத்துவ மற்றும் வரத முத்திரா



சங்கருடைய கை கட்டை விரல் நுனியும், ஆள்காட்டி விரல் நுனியும் இணைந்து ஒரு வளையம் போல காட்சியளிக்க மற்ற மூன்று விரல்கள் விலகியும் இருக்கின்றது. இது ஆசீர்வாதம் அளிக்கும் அடையாளம் என்று ஏதோ ஒரு ஆழமான இரகசியத்தை உணர்த்தக்கூடிய அடையாளம் என்றும் கூறப்படுகிறது. ஆசீர்வாதம் என்பது ஒவ்வொரு ஆத்மாவும், தூய்மையும், அமைதியும் ஆனந்தமும் உள்ள வாழ்க்கைக்கு ஆதாரமான அறிவை (ஞானம்) அருளுவதாகும். இதன் மூலமாகவே ஆத்மாவுக்கு உலக பந்தனங்களிலிருந்து விடுதலை கிடைக்கிறது. தத்துவ முத்திரை என்பது மேலே கூறியது போல, பரமாத்மாவாகிய சிவன், ஆத்மாவைப் பற்றியும், தன்னைப் பற்றியும் ஞானம் அருளுவதைக் குறிக்கின்றது.

### ஜபமாலை (ரோஸரி)


கையில் 50 மணிகள் கொண்டமாலை காட்டப்பட்டுள்ளது. இதற்கு ருத்ராக்ஷ மாலை என்று பெயர். இது ருத்ர மற்றும் அக்க்ஷ என்ற இரு வார்த்தைகளும் இணைந்த ஒன்றாகும். ருத்ர என்பது சக்தியையும், கண்டிப்பான ஒழுக்கத்தையும் அக்க்ஷ என்பது



கண்ணையும் குறிக்கிறது. ருத்ராக்ஷ என்றால் எப்போதும் விழிப்புடன் இருப்பவர் என்று பொருள் படும். 50 மணிகள் என்பது தேவநாகரி, 50 எழுத்துக்களைக் கொண்டிருப்பதைக் குறிக்கிறது. எண்ணமும், சொல்லும், செயலும், மணிபோல இருக்க உதவும் யோகத்திற்குத் தொடர்புடையதாக உள்ளது. ஆதலால் ரோஸரி யோகத்தின் அடையாளம் எனக் கூறப்படுகின்றது.


பொதுவாக ருத்ராக்ஷமாலை 108 மணிகளின் கோர்வையாக உள்ளது. இது 108 ஆத்மாக்கள், ஆத்ம ஞானம் என்னும் கூர்மையான அறிவுக் கண்ணைப் பெற்று நிறை குறைகளைக் கண்டறியும் சக்தியையும் பெற்று, பஞ்ச விகாரங்களிலிருந்து விடுதலை பெற்றவர்களாதலால் கடவுளின் அன்புக்குப்பாத்திரமானவர்கள். ஆதலால் மற்ற எல்லோராலும் ஜபிக்கக் கூடியவர்களானார்கள் என்பதாகும்.

### கமண்டலம்:



கையிலுள்ள கமண்டலம், முற்றிக் காய்ந்த பூசனிக்காயின் மேல் தோலாலானதாகவும், இது ஞான மென்னும் அமிர்தத்தால் நிரம்பியுள்ளதாகவும் கூறப்படுகிறது. விலை மதிக்க முடியாத, ஒப்பற்ற ஞானாமிர்தம், பூசனிக்காய் ஓட்டிற்குள் தான் நிரப்பி வைக்கப்பட வேண்டுமா? இதன் உட்பொருள் என்ன? முதலாவது விசேஷம், விளைந்த பூசனிக்காயானாலும், இது தானாகவே செடியிலிருந்து உதிர்ந்து விடாது. கொடியை கத்தரித்துக் காயைப் பறிக்க வேண்டும் என்பது. இது முயற்சி செய்ய வேண்டும் என்பதைக் குறிக்கின்றது. அடுத்தது, பூசனிக்காய் ஓட்டிற்குள் உள்ளேயிருக்கும் விதை மற்றும் சதைப்பாகம் எல்லாவற்றையும் சுத்தமாக நீக்கி விட்டு ஓடு மட்டும் தான் பயன்படுத்தப்படுகிறது. இது ஆன்மீகவாதியானவர் உலகிய பந்தனங்கள் அனைத்தையும் விலக்கி, தன்னைத் தூய்மைப் படுத்த வேண்டும் என்பதைக் குறிக்கின்றது. உள்ளத்தில் இதுவரையிலும் நிரம்பியிருக்கும் பலவிதமான உலகிய எண்ணங்களை விலக்கி விடும்போது, பரமாத்மாவாகிய சிவனுடைய தெய்வீக ஞானாமிர்தம் நிரப்பப்படுவதற்கு லாயக்காகிவிடுகிறது என்பதைக் குறிக்கின்றது.


### மூக்கண்:



முக்கண் அல்லது திரியம்புகா என்பது மூன்று கண்களைக் குறிக்கின்றது. இரு கண்கள் அரைக்கண் மட்டும் திறந்திருப்பது போல தியானத்தில் அமர்ந்திருக்கும் காட்சி, உள்முகமாகவும், உண்மை நிலையிலும் நிலைத்திருப்பதைக் குறிக்கும். திரிபுரம் எரித்த சிவன் என்ற கதை வழக்கிலுள்ளது. அதாவது சிவன் தனது கண்களை முழுமையாகத் திறக்கும்போது அதர்மத்திற்கு அடிப்படையான காமம், கோபம், லோபம் போன்ற கடுமையான விகாரங்கள் எரிந்து சாம்பலாகி விடுகின்றது. இதன் மூலம் சிவன், தீர்க்கதரிசி, எல்லாம் அறிந்த ஞானக்கடல் என அறியப்படு கின்றார். இதன் காரணமாக எந்த ஒரு தீமையும் இவரை அணுக முடியாது என்பதுமாகும்.

மூன்றவாது கண் அல்லது ஞானக்கண், கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்றையும் அறிந்தவர். மறைவாக இருப்பது, சூட்சுமமாக இருப்பது, புலப்படாமலிருப்பது என்ற அனைத்தையும் அறிந்தவர். மற்ற இரு கண்கள் அருணா, வருணா எனப்படுகிறது. இதன் பொருள் எல்லாம் அறிந்தவராக இருப்பதால் அனைவர் மீதும் கருணை யுடையவராகவும், ஒரே நிலையில் நிலைத்து ஆனந்தமாக இருப்பவர் என்பதாகும்.

## பிறைச்சந்திரன்



இந்தியாவில் சந்திரனை வைத்து காலத்தைக் கணக்கிடும் வழக்கம் உள்ளது. 30 நாட்களைக் கொண்ட காலண்டர், சந்திரனை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கிறது. வளர்பிறை என்றும், தேய்பிறை என்றும் கூறுகின்றோம். வளர்பிறை (சுக்லபக்ஷம்) நிறையுடையதாகவும், தேய்பிறை (கிருஷ்ண பக்ஷம்) குறையுடையதாகவும் நிகழ்வுகளைக் கணக்கிட்டிருக்கிறார்கள். இதுபோல மனிதப் பிறவியும், இறப்பும், வாழ்வும், தாழ்வும் கணிக்கப்படுகிறது. அடுத்து தலைக்கொண்டையுடன் ஒட்டிக் காணப்படும் பிறைச் சந்திரன், தலை முடியோடு சம்மந்தப்பட்டிருப்பதாகவும், தலை முடியிலிருந்து விழும் கங்கை நீரானது காலச் சக்கரத்தைப் பற்றிய ஞானத்தின் அடையாளமாகக் கூறப்படுகிறது. மேலும் சந்திரன் அமைதி மற்றும் ஞானத்தோடு சம்மந்தமுடையதாகக் காட்டப்பட்டிருப்பதால் சந்திரன் சோம் என்று அழைக்கப்படுகிறது ஆங்கிலத்தில் Monday என்கிறார்கள். தமிழில் திங்கள் கிழமை அல்லது சோமவாரம் என அழைக்கப்படுகிறது. சோம என்றால் ஞானம், ரசம் என்றால் ஞானத்தின் மூலம் கிடைக்கின்ற மகிழ்ச்சி அல்லது ஆனந்தம் எனும் பலன். ஆதலால் சிவன் ஞானாமிர்தத்தைக் குறிக்கும். சோமரசம் வழங்குகிறார் என்பதாகும். ஆதலாலேயே திங்கட்கிழமை சிவனுக்குகந்த நாளாக அனுஷ்டிக்கப்படுகிறது.

## நாகலிங்கப்பூ

நன்றாக மலர்ந்த நாகலிங்கப்பூ சங்கர் தலைமீது காட்டியிருக்கின்றார்கள். இப்பூவிற்கு



விசேஷ குணமுண்டு. இதன் ஐங்கோண இதழ்கள் கூம்புவடிவமாக இருக்கின்றது. கூம்பின் அடிப்பாகத்திலிருந்து ஐந்து பாகம் போல தண்டு விரிவடைந்து மேலே அகலமாகவும், ஐந்துதலை நாகம்போலகாட்சியளிப்பதைப் பார்த்திருக்கின்றோம். இந்தப்பூவின் மணம், மயக்கும் குணமுடையதாகும். தெய்வீக ஞானத்தை ஆழமாக உணர்ந்து, திவ்ய குணங்களில் நிலைத்திருப்போர் எல்லோருடைய நலனையும் கருத்திற் கொண்டவராகவும் சேவை செய்ய வேண்டுமென்ற மனப்பாங்கும் உடையவர் என்பதால் ஆன்மீக போதையுடையவர் என்று கருதப்படுகின்றார். இதற்குத் தான் நாகலிங்கப்பூ ஒப்புவமையாக கூறப்படுகிறது

## குண்டலம்

இரு செவிகளில் இரண்டு குண்டலங்கள் காணப்படுகின்றன. ஒரு குண்டலத்திற்கு அலக்ஷ்யா என்றும் இன்னொன்றுக்கு நிரஞ்சனா என்றும் பெயர். அலக்ஷ்யா என்றால் கண்களுக்குப் புலப்படாதது. சூட்சுமமானது, தெய்வீகமானது என்று பொருள். நிரஞ்சனா என்றால் தூய்மையும், தெய்வீகத்



தன்மையும் உடையது என்பதாகும். இவ்விரண்டு குண்டலங்களும், பரமாத்மாவாகிய சிவன் ஸ்தூலத்திற்கு அப்பாற்பட்டவராக, கண்களுக்குப் புலப்படாதவராக என்றும் தூய்மையாக இருக்கின்றார் என்பதையும் குறிக்கும். ஒரு சமயப் பிரிவைச் சேர்ந்த சாதுக்கள் அலக்நிரஞன், துக்பஞ்சன் (துன்பம் துடைப்பவர்) என்று ஜபித்துக்கொண்டே தீர்த்தயாத்திரைமேற்கொள்கின்றனர். இவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும்போதும் கடவுளை நினைவூட்டும் இவ்வார்த்தைகளை பரிமாறிக் கொள்கிறார்கள்.

## புலித்தோல் ஆசனம்



புலித்தோலை இடுப்பில் உடுத்திக் கொண்டும், புலித்தோலின் மீது மௌனத்தில் அமர்ந்து கொண்டும் இருக்கும் காட்சியைப் பார்க்கின்றோம். பலத்திற்கும், துணிச்சலுக்கும் வேகத்திற்கும் அடையாளம் புலி. மிருக வேட்டையாடும் புலியானது கொடூரத்தன்மையும், அகங்காரமும் உடையது. புலித்தோல் மீது அமர்வதென்பது, மனதின் கொடூரமான விகார எண்ணங்களையும் அகம்பாவத்தையும் கொல்வது என்று பொருள் படும். யாரொருவர் அகங்காரமின்றியும், கொல்லாமையும், அஹிம்சையும், துணிவும் உடையவராக இருக்கின்றாரோ அவர் தான் தியானத்தில் லயித்திருக்க முடியும் என்பதைக் குறிக்கின்றது. கடவுளிடம் அகங்காரமில்லை, கர்வமில்லை, பயமில்லை, வெறுப்பில்லை. அவர் சர்வ சக்திவானாக இருக்கின்றார். இந்த குணங்களை விரும்பியே, புலித்தோல் ஆசனத்தின்மீது அமர்ந்து தியானம் செய்கின்றார்கள் என்று கூறப்படுகிறது. புலித்தோலுக்கு மின்காந்த சக்தி இருப்பதாகக் கூறப்படுகிறது. அதனால் இதன் மீது அமர்ந்திருப்பவரை எந்த ஒரு விஷ ஜந்துவும் நெருங்க முடியாது. யோகியானவர், மனோ விகாரங்களால் தீண்ட முடியாத சக்தி அலைகளின் கோட்டைக்குள் பத்திரமாக இருக்கின்றார் என்பது புலித்தோல் ஆசனத்தின் அடையாளமாகும்.

## ரிஷப வாகனம்

சித்திரத்தில், சங்கர் அருகே நந்தி அல்லது ரிஷபம் காணப்படுகிறது. இது சிவனுடைய வாகனம் எனக் கருதுகின்றார்கள். சம்ஸ்கிருதத்தில் ரிஷபம் என்பதற்கு இரண்டு அர்த்தங்கள் உண்டு. ஒன்று காளை மற்றொன்று தர்மம். ஆதலால் சிவன் தர்மத்தை தனது வாகனமாகக் கொண்டிருக்கின்றார் என்றே பொருள் கொள்ள வேண்டும். யாரொருவர் எண்ணம், சொல், செயலில் ஒழுக்கமும், நேர்மையும் உடையவராக இருக்கின்றாரோ அவரை தனது வாகனமாக (ஆதாரமாக) நிராகாரமான சிவன் ஆட்கொள்கின்றார் என்பதாகும். ரிஷபத்தின் கொம்புகள் பொன்னாலானதாகவும், இதன் நாக்கு, வாய்க்கு வெளியே அதன் நுனி வளைந்து மூக்கைத் தொடுவது போல சித்தரிக்கப்பட்டுள்ளது. இதன் பொருள் ஞானமானது, நடைமுறையில் திருப்தியளிக்கும் வகையில் உள்ளது என்பதைக் குறிக்கின்றது. இது இவ்வாறு இதனை வடிவமைத்த கலைஞர்களுடைய கருத்தாக உள்ளது. ஆதலால் நந்தியானது, ஒழுக்கம், நீதி நேர்மை, எனும் தர்மத்தின் வழி நடக்கும் பிரஜாபிதா பிரம்மாவைக் குறிக்கும். சிவன், ஞானம் அருளுவதற்காக, பிரம்மாவைக் கருவியாக ஆக்கிக் கொண்டார். சிவன் பிரம்மாவில் பரகாய பிரவேசம் செய்தார் அல்லது ஆட்கொண்டார் என்பதால் சிவன் சவாரி செய்யும் வாகனமாக பிரம்மா



ஆகிவிட்டார். ஆதலாலேயே பிரம்மா நந்திதேவர் என்றும், பாகீரதி (பாக்கிய ரதம்) எனவும் அழைக்கப்படுகின்றார்.

## பனிப்பாறைகளும், ஆலமரமும்

சங்கர் மலைச்சாரலின் பின்னனியில் உறுதியான பாறைமீது விரிக்கப்பட்ட புலித் தோல் ஆசனத்தின் மீது அமர்ந்திருப்பதாகக் காட்டப்பட்டிருப்பது, தனது கொள்கையிலும், நம்பிக்கையிலும் உறுதியாக இருப்பதைக் குறிக்கும். தான் காட்டுகின்றவழியும், மாறாதது என்பது. பனிமலைத் தொடரானது, சுற்றுப்புறச் சூழலின் புனிதத்தன்மையையும், அமைதி நிலவியிருப்பதையும் குறிக்கின்றது. மேலும் ஆலமரத்தடியில் அமர்ந்திருப்பதாகவும், அம்மரத்தின் கிளைகள் பூமியைத்தொடுவது போலவும் காட்டப்பட்டுள்ளது. இது ஆத்ம லோகத்தை நோக்கிய ஆன்மீகப் பயணத்தில், களைப்படைந்துவிட்ட ஆத்மாக்களுக்கு ஓய்வும், ஆறுதலும் அளிக்கும் காட்சியாகும். ஆலமரத்தின் விதை மிக நுண்ணியதாக இருப்பினும், மரமானது அதன் பரந்து அடர்ந்த கிளைகளுடன் பிரம்மாண்டமாகக் காட்சிதருகின்றது. இவ்விருக்ஷம் பல வித மதங்களும், பலவிதக் கொள்கைகளும், பலவித அரசுகளையுமுடைய மனித சிருஷ்டியைக் குறிக்கின்றது.



## வில்வ மரம்

ஆலமரத்தடன் வில்வ மரமும் காட்டப்பட்டுள்ளது. இம்மரத்தின் விசேஷம் என்னவென்றால் இது மூன்று இலைகளையுடைய கொத்தாக இருக்கின்றது. இது பிரம்மா, விஷ்ணு, சங்கர் என்ற மும்மூர்த்திகளைப் படைப்பவர் பரமாத்மாவாகிய சிவன் என்பதைக் குறிப்பதாக உள்ளது. சிவனுக்கு மட்டுமே நறுமணமில்லாத அரளிப்பூ, வில்வ இலைகளை அர்ச்சிக்கின்றனர். இது நாம் நமது உள்ளத்தில் படிந்து கிடக்கும் அழுக்குகளை அவரிடம் அர்ப்பணித்தலைக் குறிப்பதாகும்.



## விஷ ஜந்துக்கள்

வியப்பளிக்கும் விஷயம் என்னவென்றால் தியானத்தில் அமர்ந்திருக்கும் சங்கர் எதிரில், பாம்பு, தேள் போன்ற விஷ ஜந்துக்கள் விளையாடிக் கொண்டிருப்பதுபோல காணப்படுகிறது. இவைகள் விஷ ஜந்துக்களாகயிருப்பினும், இத்தன்மைகளை இழந்து சாதாரண ஜந்துக்களாகவே இருக்கின்றது. இக்காட்சி பரமாத்மாவின் ஆதிக்கத்தில், மனிதர்கள் தங்களிடமுள்ள விகார குணங்கள் எனும் விஷத்தன்மையிலிருந்து விடுபட்டுவிடுகிறார்கள் என்பதைக் குறிப்பதாக உள்ளது.

## மயான பூமி

சில சமயங்களில் இமயமலைச் சாரலில் வில்வ மரத்தடியில் அமர்ந்திருக்கும் காட்சியும், சில சமயங்களில் மயான பூமியில் அமர்ந்திருப்பது போன்ற காட்சியும் சித்தரிக்கப்பட்டுள்ளன. இது பற்றற்ற நிலையையும், வைராக்கியத்தையும் குறிக்கும். தேக உணர்வுகளையும், ஆசாபாசங்களையும் அகங்காரத்தையும் துறக்கின்றவர்கள், பரமாத்மாவின் அருகாமையில் செல்ல முடியும் என்பதைக் குறிப்பதாகும்.



## சிவனும் சங்கரும்

சிவன் நிராகாரமானவர், சுயம் பிரகாசமானவர். (சுயம்பு) இவருக்கு தாய், தந்தை இல்லை. இவர் தான் எல்லோருக்கும் தாயும், தந்தையுமாக விளங்குபவர். குணங்களில் கடலாக இருப்பவர், என்றும் மாறாத தன்மை உடையவர் சர்வ சக்திவான் எல்லாம் அறிந்தவர், சர்வ சக்தியுடையவர் தியானம் செய்ய வேண்டிய அவசியம் இருக்குமா? இதன் அடிப்படையில் சங்கர் உருவில் காட்சியளிப்பவர் சிவன் அல்ல என்பது தெளிவாகிறது. சிவன் பரமாத்மா, சங்கர் சிவனுடைய படைப்பு சங்கர் ஆத்மா. கலியுகக் கடைசியில் அதர்மத்தை விநாசம் செய்யும் ஒட்டுமொத்த சக்தியின் அடையாளமாக விளங்கும் சூட்சும தேவதை. மூன்றாவது கண்ணும், சிவனுடைய குணாதிசயங்களை வெளிப்படுத்தும் முகமாக உருவாகப்படுத்தப்பட்ட வடிவமே சங்கர். உண்மையில் சிவன் தான் ஞானம் அருளுகின்றார். தூய்மைப்படுத்தும் சக்தியை அளிக்கின்றார். ஆத்மாவுக்கு விடுதலை அளிக்கும் சத்குருவாகவும் இருப்பவர் நிராகாரமாக விளங்கும் சிவனேயாவார். சிவன் தியானம் செய்ய வேண்டிய அவசியமில்லை என்று பார்த்தோம். இதே போல வைராக்கியத்தைக் குறிக்கும் சாம்பல் பூசிக் கொள்ள வேண்டிய அவசியமும் சிவனுக்கில்லை.

ஆரம்ப காலத்தில், பரமாத்மாவாகிய சிவனுடைய அறிமுகம் பற்றிய உட்பொருளை உணர்த்துவதற்காகவே, கலைஞர்கள் சங்கர் போன்ற உருவத்தை வடிவமைத்திருந்த போதிலும், நாளடைவில் சிவன், யார் எப்படி இருக்கின்றார் எங்கே இருக்கின்றார் என்ன செய்கின்றார் என்ற உண்மைகள் மறைந்து விட்டதால் சங்கர் தான் சிவன் என்றே மக்கள் நம்புகின்ற நிலைமை உருவாகி நிலைத்து விட்டது. மக்கள் சிவனுடைய குணாதிசயங்களை சங்கருடையதாகவே எண்ணிவிட்டனர். சிவனுக்கு ஸ்தூல உருவமில்லை. சங்கருக்கு சூட்சும சரீரம் உண்டு. ஆகவே சிவன் பரமாத்மா. சங்கர் தேவதை. பரமாத்வாகிய சிவன் தான் பிரம்மா, விஷ்ணு, சங்கர் என்ற மும்மூர்த்திகளையும் படைக்கின்றார். இவ்வாறு உண்மையை யதார்த்தமாகப் புரிந்து கொள்ள வேண்டும்

# சிவராத்திரி வைரம் போன்ற ஜெயந்தி விழா

உலகத்தில் யாராவது ஒருவருடைய பிறந்த நாளை விழாவாக மக்கள் கொண்டாடுகின்றனர். அவருடைய வாழ்க்கையைப் பற்றி ஒருசிலர் தெரிந்துள்ளனர். உதாரணமாக விவேகானந்தர் அல்லது மகாத்மா புத்தரின் பிறந்தநாளைக் கொண்டாடுபவர்கள் அம்மகான்களுடைய வாழ்க்கை வரலாற்றைத் தெரிந்துள்ளனர். அக்குறிப்பிட்ட நாளில் அவர்களைப் பற்றிய சிறப்புகளை வர்ணனை செய்து அம்மகான்களின் வாழ்க்கை முறையிலிருந்து நற்குணங்களை கிரகித்து கடைப்பிடிக்க முயற்சியும் செய்கின்றனர். ஆனால் சிவராத்திரி பண்டிகையை அனுசரிக்கும் மக்களோ வெறுமனே இரவில் கண்விழித்திருப்பது, விரதம் இருப்பது பூஜை செய்வது என்ற முறையில் விழாவைக் கொண்டாடுகின்றனர். இவர்கள் சிவபாபாவின் அலௌகீக ஜென்மம் மற்றும் கடமையைப் பற்றி அறிந்து கொள்ளவேயில்லை. மாறாக ஒருவேளை காலகண்டனை தூர ஓட்டுபவர், அனைவருடைய பொக்கிஷங்களையும் நிரப்புபவர், சங்கடங்களிலிருந்து விமோசனம் அளிப்பவராகிய சிவனைப் பற்றி அறிந்திருப்பார்களேயானால் இன்று அனைவருடைய பொக்கிஷங்களும் நிறைந்து, காலகண்டனும் தூரத்தில் விலகி இருப்பான்.

இப்பொழுது உங்களுக்கு கிடைத்துள்ள சிவபகவான், நமது பரம தந்யின் சித்திரம் (படம்) மூர்த்தியாக சிவன் அல்லது சிவபெருமான் என்று நாம் இதுவரை கருதிக்கொண்டிருப்பவரை விட முற்றிலும் மாறுபட்டிருப் பதைக் காண்கின்றீர்கள். அவர் ஆண் அல்லது பெண் உருவம் கொண்டவரல்ல; மாறாக பெருவிரல் அல்லது முட்டை வடிவம் அல்லது ஜோதிப் புள்ளி வடிவமானவர். சிவன் எல்லோராலும் மதிக்கப்படுகின்ற மற்ற மனிதர்களிலிருந்து தனிப்பட்ட ஒரு மேன்மைமிக்கவர். எனினும் சிவன் என்பவர் யார் என்ற கேள்வி எழுகின்றது. அவருடைய முழுமையான அறிமுகம் என்ன? அவர் எப்பொழுது, எவ்வாறு இந்த மனித உலகில் அவதரித்து தனது கடமைகளை நிறைவேற்றினார்? விவேகானந்தர், புத்தர் முதலியோர் சரீரமுடையவர்கள். அவர்களைப் பற்றி மக்கள் தெரிந்திருந்தனர். அவர்களுடைய தாய் தந்தையர் யார், எத்தனை ஆண்டுகளுக்கு முன் பிறந்தனர், எத்தனை வருடங்கள் வாழ்ந்திருந்தனர், என்னென்ன விசேஷ காரியங்களைச் செய்தனர் போன்ற அனைத்தும் அறிந்துள்ளார்கள். ஆனால் சிவனுடைய உருவமோ வட்டம் வடிவில் புள்ளி ரூபம்; அவருக்கென சரீரம் எதுவுமில்லை. அவருக்கு தாய் தந்தை, ஆசிரியர் யாருமில்லை. அப்படியானால் சிவன் எந்த மாதிரியான ஸ்தூல உருவத்தை தாரணை செய்திருப்பார், எப்படி தன் கடமையை நிறை வேற்றியிருப்பார் -இந்த புதிருக்கான விடையை மனிதர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

மேலும் ஒரு சிந்திக்க வேண்டிய விஷயம் என்னவெனில் சிவனின் பிறந்த தினத்தை **சிவராத்திரி** என்ற பெயரில் மக்கள் கொண்டாடுகின்றனர், இதில் இந்த ராத்திரி என்ற வார்த்தைக்கு ஏன் அழுத்தம் கொடுக்கப்படுகிறது. மற்ற மகான்களின் பிறந்த நேரம் இரவாக இருந்தாலும் பிறந்த நாளென்றே கொண்டாடப் படுகிறது, சிவராத்திரி என்பதைப் போல ராத்திரி என்ற சொல்லை சேர்ப்பதில்லை. **சிவ** என்ற சொல்லுடன் **ராத்திரி** என்ற வார்த்தைக்கு அப்படி என்ன விசேஷ மகத்துவம், அதற்கு ஏன் அந்தளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது- இந்த ரகசியத்திலுள்ள உண்மையை தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். சிவனுடைய சிலை அல்லது படத்தைப் பார்க்கும் போது சிவனுக்கு சரீரம் என்று ஒன்று இல்லை என்பதை அறிய முடிகிறது, எனவே சிவனுக்கு பகல் அல்லது இரவு

என்பதற்கு என்ன வேறுபாடு உள்ளது. மற்ற மகான்கள் சரீரத்தை எப்போது எந்த சூழ்நிலையில், எந்த வயதில் துறந்தார்கள் என்பது மக்களுக்குத் தெரியும். ஆனால் சிவனை அமர்நாத், அஜன்மா (பிறப்பு இறப்பற்றவர்) மற்றும் மிருத்யுஞ்சய் (காலனை வென்றவர்) என அவரைப் பற்றி தெரிந்து கொள்ளாமலே அவருடைய பிறந்த நாளை (ஜெயந்தி) கொண்டாடுவதெப்படி?

விவேகானந்தர், புத்தர் ஆகியோருக்கு 4 அல்லது 6-க்கு மேல் வேறு பெயர் இல்லை யென்பது அறிந்ததே. ஆனால் சிவனுடைய பிறந்த நாளை முன்னிட்டு சிவராத்திரி கொண்டாடப்படுகிறது. அவருக்கு ஆயிரம் (சஹஸ்ர) பெயர்கள் உள்ளன, உதாரணமாக அமர்நாத், சோமநாத், விஷ்வேஷ்வர், பசுபதிநாத் போன்று பலப்பல. இந்த பெயர்கள் எல்லாம் அவருடைய குணங்கள், கடமைகள் அல்லது சேவைகளைக் குறிப்பவை என்பது தெளிவாகிறது. ஐஸ்வரிய, சக்தி, மேலான மற்றும் சிரேஷ்ட காரியங்களைப் பற்றி கூறக் கூடியவை யாகும். பாபகடேஷ்வர், முக்தேஷ்வர், பசுபதிநாத் முதலான பெயர்கள் வேறுயாருக்குமே இல்லை. இத்தனை பெயர்களுடைய சிவன் யார்? அவரைப் பற்றி முழு விவரங்கள் என்ன? இப்படி விசித்திரமான தனிப்பட்டவரைப் பற்றிய வாழ்க்கை வரலாறைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

### சிவனுடைய அறிமுகம்

சிவனுக்கு எத்தனை பெயர்கள் உள்ளனவோ அத்தனையும் அவருடைய சொரூபத்தின் அறிமுகத்தைத் தருபவை. உதாரணமாக **பசுபதிநாத்** என்ற பெயரை எடுத்துக் கொள்வோம். இந்த பெயரில் நேபாளத்தில் ஒரு முக்கியமான மிகவும் பிரசித்தி பெற்ற கோவில் உள்ளது. அந்நாட்டு அரசர் மற்றும் அரச குடும்பத்தினரும் மற்றவர்களும் அந்த ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள சிவனை தங்கள் இஷ்ட தெய்வமாக வழிபடுகின்றனர். பாரத மக்களும் நேபாளத்தின் நட்டைக் கருத்தில் கொண்டு இந்த ஆலயத்திற்கு தங்கள் பங்காக காணிக்கை அனுப்பி வருகின்றனர். சரி, சிவனுக்கு **பசுபதி** என்று ஏன் கூறப்படுகிறது?

பசுபதி என்ற பெயரில் பசு என்ற வார்த்தை பசு அல்லது எருமை எனப்படுகின்ற எந்த ஒரு விலங்கினத்தையும் குறிப்பதல்ல, மாறாக **ஆத்மா** என்பதை குறிக்கின்ற சொல் ஆகும். பாரதம் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் சைவ மதத்தைச் சார்ந்தவர்கள் அவர்கள் மதத்தில் ஆத்மா என்பதற்கு பசு என்று கூறப்பட்டுள்ளது. ஏனெனில் பசு என்பதன் அர்த்தம் கட்டுப்பட்டிருப்பது (பந்தனம்) ஆத்மா மாயை அல்லது இயற்கையின் பந்தனத்தில் இருக்கிறது ஆகவே பசு. பரமாத்மா சிவன் பந்தனத்திலிருந்து சதா விடுபட்டவர். ஆத்மாக்கள் என்கின்ற பசுக்களை மாயா ரூபத்தின் வலையிலிருந்து விடுவிப்பவர். ஆகவே தான் பசுபதிநாத் என்றும் முக்தேஷ்வர் முதலான பெயர்களால் மகிமை பாடி பூஜிக்கப்படுகிறார். அவர் சிவன் என்றும் அழைக்கப்படுகிறார். சிவன் என்பதன் அர்த்தம் நன்மை செய்பவர் (கல்யாண்). ஆத்மா யார் மூலமாக நன்மை மற்றும் முக்தி அடைகிறதோ அவர் தான் சிவன். அதே சிவனை **திரிபுவனேஸ்வர்** அல்லது **சர்வேஷ்வர்** என்றும் கூட கூறப்படுகிறது. ஏனென்றால் மூன்று புவனங்களில் அல்லது உலகத்தில் வசிக்கக்கூடிய அனைத்து ஜீவராசிகள் மற்றும் தேவி தேவதாக்களுக்கும் ஒரே ஒரு ஈஸ்வரன் அல்லது உயர்வாக மதிக்கப் படுபவர் சிவன் மட்டுமே. மற்ற அனைவரும் சரீர முடையவர்கள் (தேகதாரி), படைக்கப்பட்டவர்கள். சிவன் தான் புள்ளி வடிவமானவர், சரீரமற்றவர், (அசரீரி) ஒளிமயமானவர், படைப்பவர் அதாவது பரமபிதா. ஆகவே அனைவரும் அவர் வசத்தில் இருப்பவர்கள் ஆகவே அவருடைய பெயர் சிவன்.

## சிவனுடைய உருவமாகிய ஜோதிப் புள்ளிக்கு புகழாரம் ஏன்?

பாரத தேசத்தில் கோவில்களுக்கு செல்லும் போது மூர்த்தி வடிவ தேவதைகளுக்கு பூஜை நடைபெறுவதை காண்கின்றோம். லிங்கம் அல்லது புள்ளி வடிவத்திற்கு அல்ல. ஆனால் சிவனுடைய நினைவுச்சின்னம் புள்ளி போன்ற வடிவமைப்பு, இவ்வாறு ஏன்? இதனால் தெளிவாகிறது, மற்ற தேவ-தேவதைகள் அனைவரும் சரீரமுடையவர்கள் அவரவர் குணம்-செயல்கள்-சுபாவம் இதற்கேற்றார் போல உடலமைப்பைப் பெறுகிறார்கள். ஆனால் சிவன் அசரீரியாகிய பரமாத்மா, ஆகவே எவ்விதமான சரீர ரூபம் இல்லை. ஜோதி பிந்து சிவன் உண்மையில் பிரம்மா, விஷ்ணு, சங்கர் ஆகியோரைப் படைத்தவர், ஆதலால் அவரை திரிமூர்த்தி மற்றும் திரியம்பகேஷ்வர் என்று அழைக்கப்படுகிறார். மும்பை அருகில் உள்ள எலிஃபெண்டா-வில் உள்ள சித்திரத்தில் சிவன்-பிரம்மா, விஷ்ணு, சங்கரை படைப்பவராகக் காட்டப்பட்டுள்ளது. உதயபூரில் ஏக்நாத் என்ற கோவில் உள்ளது, அதில் மேலே சிவன் மற்றும் கீழே மூன்று தேவர்களின் உருவச் சித்திரம் உள்ளது. ஆகவே சிவராத்திரி பண்டிகை (த்ரிதேவ்) மூன்று தேவதாக்களின் படைப்பாளி யாகிய பரமாத்மாவுடன் சம்மந்தப்பட்ட உற்சவம். அந்தளவிற்கு உயர்ந்தது இந்த உற்சவம்.

ஆத்மாக்கள் என்ற பசுக்களை மாயாவின் வலையிலிருந்து சிவன் விடுவித்த காரணத்தால் அவருடைய பெயர் பசுபதிநாத் அல்லது முக்தேஷ்வர் என்றாகியது. அவர் மனிதர்களுடைய துக்கத்தை எப்போது போக்கினார். அதனால் ஹர அல்லது துக்கஹர்த்தா (துக்கத்தைப் போக்குபவர்) என்றழைக்கப்பட்டார்? அவர் மனிதர்களின் சங்கடத்தை எப்போது தீர்த்து வைத்தார் மற்றும் பாவங்களை எப்போது அழியச் செய்தார், இதனால் பாபகடேஷ்வர் அல்லது சங்கட்மோசன் (இன்னல்களை நீக்குபவர்) எனப்பட்டார். எப்பொழுது அனைத்து நரன்-நாரிகள், (ஆண்கள்-பெண்கள்) பாவிகள் அல்லது பதித் ஆகியிருந்தார்களோ, மேலும் மாயாவின் சங்கிலியால் இறுக்கமாக கட்டப்பட்ட விலங்குகள் போல் அஞ்ஞானியாகவும், துக்கப்பட்டவர்களாகவும் இருந்திருப்பார்களோ அப்போது மேற்கூறிய கடமைகளைச் செய்தார் என்பது தெளிவாகிறது. அந்த சமயம் கலியுகத்தின் இறுதிகாலகட்டமாக இருந்திருக்கலாம். அப்போது மக்கள் தர்மம், கர்மம் ஆகியவை கீழ்த்தரமாகவும், யோகம் மற்றும் இறைத் தொடர்பற்று இருந்திருப்பார்கள். அதாவது கலி யுக முடிவில் தான் சிவன் உலகத்திற்கு நன்மை செய்துள்ளார்/ மேலும் அனைவரது துக்கத்தைப் போக்கி சுகமளித்துள்ளார். அதன் பிறகு சுகமான உலகம் அதாவது சத்யுகம் ஆரம்பமாகியது. அந்த சமயத்தில் சிவனுடைய பொக்கிஷம் நிறைந்தது. இருள் நீங்கியது என்ற வாக்கு பிரசித்தி பெற்றது. எனவே கலியுக இறுதியில் தான் சிவன் தன் கடமைகளை செய்திருக்கக்கூடும். அதன் பிறகு சத்யுகத்தில் எல்லோரும் பாவச் செயல்களிலிருந்தும், துக்கங்களிலிருந்தும் விடுபட்டுள்ளனர்.

## இராத்திரி என்ற வார்த்தையின் கருத்து மற்றும் சிவராத்திரியின் மகிமை

சிவராத்திரி பண்டிகை வெறும் 10-12 மணித்துளிகள் மட்டுமே சம்மந்தப்பட்டதல்ல, மாறாக அறியாமையின் இரவு சம்மந்தப்பட்டது. நமக்குத் தெரியும் இரவு காலத்தில் இருள் சூழ்ந்துவிடுகிறது, மக்கள் உறங்கிவிடுகின்றனர், காம விகாரத்தில் வசப்படுகின்றனர், திருட்டு-கொள்ளை சம்பவங்கள் நடக்கின்றன. அத்தோடு தமோ குண சூழ் நிலையும் ஏற்படுகிறது. இதன் அர்த்தமாகத் தான் துவாபர, கலியுகத்திற்கு இரவு என்று கூறப்படுகிறது, சத்யுகம், திரேதாயுகத்தை பகல் என சொல்லப்படுகிறது. இக்காலம் தேவதைகள் வாழும் சதோபிரதான

நேரம். ஆனால் கலியுகக் கடைசியில் மக்கள் அறியாமை என்ற ஆழ்ந்த நித்திரையில் இருந்து காம விகாரங்களால் வசீகரிக்கப்பட்டு தமோபிர தான நிலையை அடைந்துவிடுகின்றனர். ஆகவே மக்கள் (ஜீவாத்மாக்கள்) நன்மை பெற, பாவங்களிலிருந்து முக்தி பெற மற்றும் சுகமானவர்களாவதற்காக பரமபிதா பரமாத்மா சிவன் கலியுகத்தின் கடைசியில் அவதரிக்கின்றார். கலியுகத்தின் இறுதி கால வருடங்களில் சிவராத்திரி என்ற பண்டிகை கொண்டாடப்படுகிறது. ஏனெனில் அந்த அறியாமை இரவில் (ராத்திரி) சிவன் அனைவருக்கும் நன்மை பயக்கின்ற உன்னத காரியங்களைச் செய்கின்றார். அந்த மகா ராத்திரியின் நினைவாக இன்று வரையிலும் கூட கடந்து போன வருடத்தின் இறுதியில் அமாவாசை தினத்திற்கு ஒரு நாள் முன்பாக காரிருள் படர்கின்றது, அப்போது சிவராத்திரி என்ற மகோத்சவம் (பெருவிழா) கொண்டாடப் படுகிறது.

## சிவன் தன் கடமைகளை எவ்வாறு நிறைவேற்றுகின்றார்:

இக்கால கட்டத்தில் எழுகின்ற கேள்வி என்னவெனில்-சிவன் சரீரமற்றவராகவும், ஜோதி பிந்து ரூபத்திலும் இருக்கின்றார். அவ்வாறெனில், மனித குலத்திற்கு நன்மை ஏற்படக் கூடிய (முன்னேற்றக் கூடிய) காரியங்களை எப்படி செய்கிறார்? இவ்வுலகில் எவ்விதம் பிறவி எடுக்கின்றார்?

சிவன் பிறப்பு இறப்பில் வராதவர், மரணத்தை வென்றவர் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அவர் தேவதைகளுக்கெல்லாம் தேவதா அதாவது சர்வேஷ்வர். ஆதலால் அவருடைய பிறவி எந்தவொரு தேவதை அல்லது மனிதனுடைய புத்திரனாக (மகன்) ஏற்படுவதில்லை. சிவன் கர்மாதீத் மற்றும் சதா (முக்தி) விடுபட்டவர், இரத்த ஓட்டமுடைய மனித பந்தனத்தில் வருவதில்லை. அவர் காலனுக்கெல்லாம் காலன் (மகாகாளேஷ்வர்) எனவே குழந்தை, வாலிபம், வயோதிகம் இவற்றில் வருவதில்லை அதாவது பிறப்பு-இறப்பு என்ற சக்கரத்தின் கட்டுக்குள் வருவதில்லை.

உலகம் முழுவதுமுள்ள ஆண்-பெண் இரு பாலருக்கு முக்தி தருவதற்கு, பக்தர்களுக்கு தன் அறிமுகத்தைக் கொடுக்க, மனிதர்கள் பாவம், துக்கத்திலிருந்து விடுதலை அளிக்க அதாவது சத்யுக தூய்மையான, சுகம் நிறைந்த படைப்பை (சிருஷ்டி) படைப்பதற்காக கலி யுக கடைசியில் ஒரு சாதாரண மனித உடலில் பிரவேசம் அதாவது அவதரிக்கின்றார், தான் ஆட்கொண்ட அவருக்கு பிரஜாபிதா பிரம்மா என பெயர் சூட்டுகிறார். இவர் வாய் மூலம் ஈஸ்வரிய ஞானம் மற்றும் சகஜ இராஜயோகத்தைக் கற்பித்து மனிதர்களை தேவதைகளாக உருவாக்குகின்றார். இதன்படி பாரதவாசிகளின் நடத்தை, ஒழுக்கத்தை முறைப்படுத்தி (சீர்திருத்தி) சத்யுக தெய்வீக சிருஷ்டியை மீண்டும் ஸ்தாபனை செய்கின்றார்.

சிவபுராணத்தில் - நான் பிரம்மாவின் நெற்றியிலிருந்து வெளிப்படுவேன் என்று சிவ பகவான் கூறியதாக எழுதப்பட்டுள்ளது. மேலும் இந்த கூற்றின்படி முழு உலகத்திற்கும் கிருபை (அனுகிரஹம்) புரிவதற்காக பிரம்மாவின் நெற்றியிலிருந்து வெளிப்பட்டார், அவருடைய பெயர் ருத்ரன் (இந்த வாக்கியம் சிவபுராணத்தில் கோடி ருத்ர சம்ஹிதா - கோடி ருத்ர மகா மந்திரம் - அத்யாயம் 42) என்றும் சிவபுராணத்தில் எழுதப்பட்டுள்ளது. சத்யுக சிருஷ்டியின் நிர்மாணக் காரியம் எதிர்பார்த்தபடி அதிவேகமாக அமையாத காரணத்தால் சிவன் பிரம்மா வின் உடலில் பிரவேசம் செய்து அவர் மூலமாக சிருஷ்டியைப் படைத்தார் - இதுவும் கூட சிவபுராணத்தில் எழுதப்பட்டுள்ளது. பகவான் சிவன் முதலில் பிரஜாபிதா பிரம்மாவைப் படைத்து அவர் மூலம் சத்யுகம் ஸ்தாபனை செய்யப்பட்டது

என்ற இந்த கருத்தும் கூட பலமுறை குறிப்பிடப்பட்டுள்ளது. புராண சம்மந்தப்பட்ட கருத்தினுடைய சாரம் பரமபிதா பரமாத்மா சிவன், பிரஜாபிதா பிரம்மாவின் நெற்றியில் அவதரித்து அவர் வாய்வழியாக ஈஸ்வரிய ஞானம் மற்றும் சகஜ இராஜயோகத்தின் படிப்பைக் கற்றுத் தந்து சிவன் உலகத்திற்கு நன்மை ஏற்படுத்தினார் என்பதே.

**உலகத்திற்கு நன்மை எற்படுத்துவதற்கான ஈஸ்வரிய வழிமுறை:**

கலியுகம் முடிவடையும் தருணத்தில் அஞ்ஞானம் எனப்படுகின்ற இருண்ட இரவில் (ராத்திரி) பிரஜா பிதா பிரம்மாவின் உடலில் பரமபிதா பரமாத்மா அவதரித்து மனிதர்களுக்கு இந்த அறிவுரை தருகின்றார் - காம இச்சையின் அனுபவம் ஒருவர் தற்கொலைக்கான விஷம் அருந்துவது போலாகும். இதனால் மனிதனின் பிறவிதோறும் அனைத்தும் நாசமடைந்து விடும். அதாவது ஞானம் என்கின்ற சோம அமிர்தத்தைப் பருகச் செய்து, சோமநாத் மற்றும் அமர்நாத் என்றழைக்கப்படுகின்ற பரமபிதா பரமாத்மா இந்த சம்சார சாகரத்தின் (குடும்ப வாழ்க்கை) விஷத்தை நீக்குகிறார். இதன் காரணமாக அவரை 'விஷத்தைப் போக்குபவர் என்றும் கூறப்படுகிறது

## உள்ளது உள்ளபடி

**சிவன் மற்றும் சங்கர் இந்த இருவருக்கும் உள்ள வித்தியாசம் என்ன? சிவலிங்கம் அல்லது ஜோதிர்லிங்கம், எந்த ஆன்மீக சொரூபத்தின் அடையாளம்? சிவனை திரிமூர்த்தி, திரியம்புகேஷ்வர், தேவதேவா என்று எந்தப் பொருளில் அழைக்கிறார்கள்?**

பதில்: (அ) சிவன்-பரமாத்மா சரீரமில்லாதவர். அதிபிரகாசமாக ஜொலிக்கும் ஒளிப்புள்ளியாக இருப்பவர். பிறப்பு இறப்பிற்கு அப்பாற்பட்டவர். எல்லா ஆத்மாக்களுக்கும் தந்தை-எல்லையற்ற ஆன்மீகப் பொக்கிஷங்களை வழங்கும் வள்ளல் - திவ்ய சிருஷ்டி கர்த்தா. ஆனால் சங்கர் சூட்சும சரீரமுள்ள தேவதை. தனக்கு வேண்டிய தெய்வீகப் பொக்கிஷங்களைப் பெற வேண்டி தவம் செய்பவர் - பரமாத்மாவாகிய சிவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்.

(ஆ) சிவன் நிராகார். ஜோதி சொரூபம் என்பதன் அடையாளச் சின்னம் தான் லிங்கம். லிங்கம் என்ற சொல்லுக்கு உருவம் என்று பொருள்.

(இ) சிவன் திரிமூர்த்திகளான பிரம்மா-விஷ்ணு-சங்கர் என்ற மும்மூர்த்திகளையும் சிருஷ்டிப்பவர். இவர்கள் சூட்சும தேவர்கள். சிவன் மும்மூர்த்திகளுக்கும் அதிபதி என்பதால் திரியம்பு கேஷ்வர், தேவா தேவா! என அழைக்கப்படுகிறார்.

**சிவனுடைய உண்மையான, அனாதியான, அவினாசியான குணம், செயல், இயல்பு மற்றும் ஆற்றல் எது?**

பதில்: சிவன் என்பதற்கு மங்களம் செய்பவர் அல்லது நன்மை செய்பவர் என்றிருந்தும், நாம் நன்மை அடையாமல் இருப்பது ஏன்?

சிவனுடைய குணம் எப்போதும் எல்லோருடைய நன்மையையே விரும்புவது

செயல்: பதிதபாவன் - பாவம் செய்த ஆத்மாக்களை தூய்மையாக்குவது

இயல்பு: (நியாரா-பியாரா) எப்போது சாட்சி ரூபத்தில் விலகியிருக்க வேண்டுமோ அப்போது விலகியும், எப்போது சம்மந்தத்தில் வரவேண்டுமோ அப்போது வருவதும் ஆகும்.

ஆற்றல்: சர்வ சக்திவான் - எல்லாம் அறிந்தவர் - உலகையே மாற்றும் சர்வ வல்லமை படைத்தவர்.

(ஆ) சிவன் கல்பத்தில் ஒருமுறை அதர்மத்தின் உச்ச கட்டத்தில் தர்மத்தை நிலை நாட்டுவதற்காக, பிரம்மாவின் சாதாரண உடலில் பரகாய பிரேவசமாகி, அவருடைய கமல வாய் மூலமாக ஞானம் அருளி சத்கதிக்கு வழிகாட்டுகின்றார். அப்போது அவரை நாடி வருவோர்க்கெல்லாம் ஞான ரத்தினங்களை வாரி, வழங்கிக் கொண்டேயிருக்கின்றார். எனினும், இதைப் புரிந்து கொள்ளாமல் ஐயப்பாடு உடையவர்களும், பழைய உலக சுகமே சதம் என நம்பி அலட்சியமாயிருப்பவர்களும், நன்மையைப் பெற முடியாமல் வஞ்சிக்கப்பட்டு விடுகின்றனர்.

**சிவனுடைய இருப்பிடம் எங்கே இருக்கின்றது? எப்படி இருக்கின்றது?**

பதில்: சிவனுடைய இருப்பிடம் பரந்தாமம் ஆகும். இதற்கு பிரம்ம தத்துவம், பிரம்ம லோகம், ஆத்ம லோகம், சாந்தி தாமம் என்ற பல பெயர்களும் உண்டு. இது சூரிய, சந்திர

நட்சத்திர மண்டலங்களையும், சூட்சும லோகத்தையும் கடந்த ஆறாவது தத்துவமாகும். இது சம்பூரண தூய்மையும், சம்பூரண அமைதியும், பொன்னிற ஒளிமயமாகவும் விளங்குகிறது.

**சிவனுடைய சின்னத்தின் மீது காணப்படும் மூன்று கோடுகளும், அதன் மத்தியில் திலகமும் எந்தக் கருத்தைப் பிரதிலிக்கிறது? அல்லது இது எந்தப் பொருளை உணர்த்துகிறது?**

பதில்: மூன்று கோடுகள், சிவன் நிராகாரமாக (சரீரமில்லாதவர்) நிர்விகாரியாக (தீய குணங்கள் எனும் விகாரங்களற்றவர்) நிரகங்காரி (அகங்காரமற்றவர்) - எல்லாம் அறிந்தவரா யிருந்தும், எல்லா குணங்களிலும் கடல் போல விளங்குபவராயினும், சர்வ வல்லமை யுள்ளவராயினும், அவர் ஒருவர் தான் உலக மங்களம் செய்பவர் என்றாலும் - இதற்காக அவர் அவதரிக்கும் போது, தன்னை அனைவருக்கும் சேவை செய்ய வந்துள்ள உலக சேவகன் என்கின்றார்)

திலகம் - இவ்வளவு குணங்களையும், சக்திகளையும் உடைய நான் ஜோதிப்புள்ளி உருவில் இருக்கின்றேன் என்பதைக் குறிப்பதாகும்.

**மனித உடலில் உள்ள ஆத்மாவின் வடிவம் என்ன? ஆத்மாவுக்கும், பரமாத்மாவுக்கும் இடையே அனாதியாகவும், அழிவில்லாமலும், உள்ள உறவு என்ன?**

பதில்: ஆத்மாவின் வடிவம் பிந்து (ஒளிப்புள்ளி)

உறவு: பரமாத்மா எல்லா ஆத்மாக்களுக்கும் தந்தை. ஆத்மாக்கள் அனைவரும் அவருடைய வாரிசுகள்.

**ஆத்மா மற்றும் பரமாத்மாவாகிய சிவனுடனான சந்திப்பு, அவருடன் மானசிக யோகம் மற்றும் ஈஸ்வரிய அனுபூதி என்னும் நிலையை எவ்வாறு சுலபமாகப் பெற முடியும்?**

பதில்: சங்கமயுகத்தில் பரமாத்மா அருளுகின்ற ஞானத்தின் படி, பரமாத்மாவையும், ஆத்மாவையும் அறிதல் வேண்டும், ஏற்க வேண்டும். சொந்தம், பந்தம் எல்லாம் அவரே என்று உணர வேண்டும். மனதையும், புத்தியையும் அவரிடம் அர்ப்பணிக்க வேண்டும். இவ்வாறு அவர் வழி நடந்து அவர் அருள் பெறும்போது ஈஸ்வரிய அனுபூதி உண்டாகும். இதற்கு மேலும் சுலபமான வழி - சிவபரமாத்மாவால் பிரம்மா என பெயர் சூட்டப்பட்டவர், சிவன் வழி நடந்து சம்பூரணமாகி விட்டார். ஆதலால் அவரை நமக்கு வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டு அவரைப் பின்பற்றி நடந்து வந்தால், ஈஸ்வரிய அனுபூதி நிலையை சுலபமாகப் பெற முடியும்.

**சிவன் ஆத்மாவின் தாய், தந்தை, சத்குரு, பரமாசிரியர், தோழன், தொண்டன் என்று எந்த அர்த்தத்தில், எந்த சந்தர்ப்பத்தில் அழைக்கப்படுகின்றார்? அவர் பரம தந்தையானால், அவரிடமிருந்து எந்த பிறப்புரிமையாகிய ஆஸ்திகளை நாம் பெற முடியும்? சிவன் மட்டும், தாயும் நீ, தந்தையும் நீ என்ற இரு சம்மந்தங்களில் போற்றப்படுவதும், நினைக்கப்படுவதும் ஏன்?**

பதில்: (அ) அன்பு செய்வதில் அவர் தாய். ஆஸ்தி வழங்கும் போது அவர் தந்தை. முக்தி அளிக்கும் போது அவர் சத்குரு. ஞானம் கற்பிக்கும் போது அவர் பரமாசிரியர். வேண்டும்போது நம் உடனிருக்கும் தோழன். வேண்டும் உதவிகளைச் செய்யும்போது அவர் தொண்டன்.

பிறப்புரிமையாக தந்தையிடமிருந்து தூய்மையையும், சாந்தியையும் பெறுகின்றோம்.

சிவனுடைய நினைவில் அன்பில் மூழ்கி விடும்போது குழந்தையை தாய், தன் மடியில் கிடத்தி ஆறுதல் அளிப்பது போல பாதுகாக்கும் தாய்.

சிவனை தந்தையாக ஏற்று, அவருடைய குழந்தையாகி விடும்போது, அவருடைய ஆஸ்திக்கு வாரிசாகி விடுகிறோம்.

**சிவனுடைய பண்டகசாலை நிறைந்திருக்கும். பயமும், பிரச்சினையும் தூரப்போகும். மேலும் சிவன் கள்ளங்கபடமற்றவர். தயாளன், வள்ளல் என்று கூறப்படுகின்றது. பயமும், பிரச்சினையும் எப்படி தூரப்போகும்? பண்டக சாலை எப்படி நிறைந்திருக்கும்?**

பதில்: சிவனுடைய பண்டக சாலையில் இருப்பதெல்லாம், தூய்மை. சாந்தி, திவ்ய குணங்கள் திவ்ய சக்திகள் ஆகும். இவை ஈஸ்வரிய சக்தியுள்ள எல்லையற்ற பொக்கிஷம். ஆதலால் இது நிரம்பியிருக்கும்போது பயமும், பிரச்சினையும் நெருங்க முடியுமா? முடியாது.

சிவன் கள்ளங்கபடமற்றவர், தயாளன், வள்ளல் என்பது சிவனுடைய பண்டக சாலையை குழந்தைகளுக்காக அதிகாலை அமிருதவேளையின் போது திறந்தே வைத்திருக் கின்றார். அந்த வேளையில், யார் வேண்டுமானாலும், எவ்வளவு வேண்டுமானாலும், புத்தி என்னும் பையை நிரப்பிக் கொள்ளலாம். ஆதலால் குழந்தைகள் அமிருத வேளையில், தந்தையை அன்புடன் நினைவு செய்வது என்ற விதிப்படி பயன்படுத்திக் கொண்டேயிருந்தால், புத்தி எனும் பண்டகசாலை எப்போதும் நிறைந்திருக்கும்.

**சிவலிங்கத்தின் மீது கலசம் தொங்கவிடப்பட்டு, சொட்டு, சொட்டாக நீர் அல்லது பால் (தைலதாரை) விழச் செய்வதன் பொருள் என்ன?**

பதில்: பக்தர்களின் ஒவ்வொரு எண்ணமும், அவருக்கே அர்ப்பணம் என்பது தான் இதன் உட்கருத்தாகும்.

**சிவனுக்கு முன்பாக நந்தி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இது யாருடைய அடையாளச் சின்னம்?**

தர்ம ஸ்தாபனைக்காக, சிவபரமாத்மா பாரத பூமிக்கு வரும்போது, பிரம்மாவின் உடலில் பிரவேசிக்கின்றார். ரதத்தில் சாரதி, சவாரி செய்வது போல பிரம்மாவின் உடல் எனும் ரதத்தில் சிவனாகிய சாரதி சவாரி செய்கின்றார். பிரம்மாவுக்கு நந்தி தேவர் என்ற பெயரும் உண்டு. சிவன் ஜோதி சொரூபமாதலால், அவரை லிங்க சின்னமாகவும் சிவன் சவாரி செய்யும் வாகனமாக நந்தியையும், லிங்க சின்னத்தின் நேர் எதிராக நந்தியை பிரதிஷ்டை செய்து விட்டனர். சிவன் பிரம்மாவின் உடலில் பிரவேசித்ததால், பூலோகத்தில், பிரம்மாவின் முகத்தில் இரு புருவமத்தியில் இருப்பதை உணர்ந்து தரிசிக்க வேண்டும். இதன் அடையாளமாகவே சிவன் கோவில்களில் பக்தர்கள் சிவனை நந்தி மூலமாக தரிசிக்க வேண்டுமென்ற ஐதீகம் உள்ளது. நந்தி பிரம்மாவின் அடையாளச்சின்னமாகும்.

**சிவனுக்கு விளாம்பழமும், அரளியும், எருக்கம்பூவும் அர்ச்சனையில் வைக்கப்படுகின்றன? இது ஏன்?**

பதில்: விளாம்பழத்தில், பழச்சத்தானது அதை மூடியிருக்கும் தோட்டில் ஒட்டாமல் விலகியிருப்பதை அறிவோம். இதுபோல ஆத்மாவாகிய நான் இந்த சரீரம் எனும்

ஒட்டினுள்ளே இருந்தாலும், இதனின்றும் விலகியிருக்கின்றேன் என்று உணர்ந்து கொண்டேன் என்பதன் ஒரு அடையாளம். அடுத்து செய்கின்ற கர்மங்களை அன்போடு செய்தாலும், அதன் பலனில் பற்று வைக்காமல் விலகியிருப்பேன் என்று உறுதி கூறுகிறேன் என்பதன் அடையாளமும் ஆகும்.

அரளிப்பூவும், எருக்கம் பூவும் நறுமணமற்றவை. மேலும் விஷத்தன்மையுடையவை. இதுபோல இப்போது நான் விஷமுள்ள தீய குணங்களையுடையவனாகி விட்டேன். இதனை தங்களிடம் அர்ப்பணித்து விட்டு இதனின்றும் விடுதலை பெறுகிறேன் என்பதன் அடையாளமாகும்.

**சிவராத்திரி, இரவில் தான் கொண்டாடப்படுகிறது. இது ஏன்? பக்தர்கள் அன்று விழித்திருப்பதேன்? உபவாசம் இருப்பதேன்? சிவராத்திரியைக் கொண்டாடும் சரியான வழி முறை யாது?**

பதில்: ராத்திரி என்பதன் உண்மைப் பொருளை புரிந்து கொள்ளாததால், கண் விழித்தல், உபவாசமிருத்தல் போன்ற காரியங்களை ஸ்தூல பாவனையாக அனுஷ்டித்து வருகிறார்கள்.

ராத்திரி என்பது அறியாமை என்னும் இருளைக் குறிக்கும் சொல் ஆகும். கண்விழித்தல் என்பது, நான் இந்த சரீரமல்ல, நான் அழிவில்லாத ஆத்மா என்ற விழிப்புணர்வு பெறுதலாகும். உபவாசம் என்பது அருகாமையிலேயே இருப்பது என்பதைக் குறிக்கும் சொல் ஆகும். அதாவது சதா காலமும் சிவனுடைய நினைவிலேயே இருத்தல் என்பதாகும்.

தன்னை ஆத்மா என உணர்ந்து, பரமாத்மாவாகிய சிவனுடைய நினைவில் இருக்க வேண்டும். இதனால் அறியாமை இருள் அகலும், துன்பமும், துயரமும் விலகிப்போகும். இது தான் சரியான வழி.

**சிவன் பரந்தாமத்திலிருந்து (நிர்வாண் தாம், சிவலோகம், பரலோகம்) எப்போது அவதாரம் செய்கின்றார்? ஆத்மாக்களுக்கு எந்த விதி மூலம் முக்தி, ஜீவன் முக்தி அளிக்கின்றார்?**

பதில்: சிவன் கலியுகத்தின் இறுதிக்கும், சத்யுக ஆரம்பத்திற்கும் இடையேயான புருஷோத்தம சங்கமயுகத்தில் அவதரிக்கின்றார்.

சிவன் ஆத்மாக்களுக்கு (நஷ்டமோஹா, ஸ்மிருதிலப்தா) எல்லாவற்றிலும் பற்றற்றும், (மன் மனாபவ) சிவனுடைய நினைவிலேயே மனதை லயித்திருக்க வேண்டும் எனும் விதி மூலம் முக்தி, ஜீவன் முக்தி அளிக்கின்றார்.

**நீங்களும் முக்தி, ஜீவன் முக்தி பெற விரும்புகிறீர்களா? அந்த விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வழி என்ன?**

பதில்: இதற்கு இராஜயோகக் கல்வி அவசியம். இதனைப் பயில பிரஜாபிதா பிரம்மா குமாரிகள் இராஜயோக நிலையங்களை அணுக வேண்டும்.

## சிவராத்திரி

சிவராத்திரி என்பது ஒரு சிறப்புமிக்க மற்றும் மிக முக்கியமான நிகழ்வை நினைவூட்டும் விழா. இது முழு படைப்பிலுள்ள மனித ஆத்மாக்களின் பரலௌகிக பரம்பிதா பரமாத்மாவினுடைய தெய்வீக ஜன்மம் அதாவது சுயம்புவாக அவதரித்த நாளாகும். முக்தி அல்லது ஜீவன்முக்தி எனப்படுகின்ற உயர்வான பிராப்தியை (பலன்) நினைவூட்டல். இதன் காரணத்தால் மற்ற பிறந்த நாள் விழா அதாவது ஜெயந்திகளோடு ஒப்பிடுகையில் மேன்யானது. ஏனெனில் பிற பிறந்த நாள் விழாக்கள் மனித ஆத்மாக்கள் மற்றும் தேவதைகளின் பிறந்த நாளை நினைவாக கொண்டாடப்படுகிறது. மாறாக சிவராத்திரியானது மனிதர்களை தேவதைகளாக்கக்கூடிய, தேவ தேவதைகளுக்கெல்லாம் தேவனாகிய, தர்ம பிதாக்களுக்கும் கூட பரமபிதாவாகிய ஒரே ஒரு சத்கதி அளிக்கும் வள்ளலாகிய பரமப்பிரிய பரமாத்மாவின் தெய்வீக சுப ஜன்ம தினத்தை நினைவூட்டுகின்ற விழா.

## சிவ செய்தி (மகாவாக்கியம்)

மனிதர்கள் அஞ்ஞானிகள் மற்றும் எந்த ஒரு (சூழ்நிலை) பிரச்சினைகளையும் எதிர்கொள்ளும் ஆற்றலற்றவர்கள். மனிதர்களின் நிலைமையை சிந்தனை செய்து பாருங்கள் - கைக் குழந்தையாக இருக்கும் போது பேசத் தெரிவதில்லை, தன்னை பாதுகாத்துக் கொள்ளத் தெரியாது. தன்னுடைய உணவு மற்றும் உயிர் பாதுகாப்பிற்கும் கூட பிறரை சார்ந்திருக்க வேண்டியுள்ளது. வளர்ந்துவிட்ட போதிலும் உலகில் அநேக வித கடுமையான (சூழ்நிலை) பிரச்சினைகளை எதிர்கொள்ள கடினமாகிவிடுகிறது. இறுதியில் காலன் வரும் சமயத்தில் போராடும் சக்தி இருப்பதில்லை. இதிகாசத்தில் புகழ்பெற்ற சிகந்தர், நெப்போலியன் மற்றும் சமீப காலத்தில் அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் கென்னடி மிகச் சிறந்த படையின் (சேனை) தலைவராக இருந்துமே காலனுக்கு முன்பாக எதிர்கொள்ள வலிமையற்றவராக இருந்தார். இதை எல்லோரும் அறிந்ததுதான். எந்தவொரு மனிதனும் தவறு செய்தால் அதற்கான எதிர்விளைவுகளை அனுபவித்துதான் ஆக வேண்டும். சாது-சந்நியாசி, ஆசார்ய-பண்டிதர்கள் அனைவருமே தத்தமது கர்மங்களினால் பிணையப்பட்டுள்ளனர். அதன் பிரகாரம் ஆயுள் மற்றும் சுகம்-துக்கம் அடைகின்றனர். மனிதர்கள் இயற்கையின் ஆவேசம் (சீற்றம்), பூகம்பம், இடைவிடா பெருமழை, வறட்சி, பஞ்சம் ஆகியவைகளை எதிர்கொள்ள சக்தியற்றவர்களாகி விடுகிறார்கள். ஆனால் ஆச்சரியப்படக்கூடிய விஷயம் என்னவெனில் கடந்து சென்ற மற்றும் காண முடியாத ஒரு முழு உருவத்தை அறிந்து கொள்ளாத காரணத்தாலும் மேலும் சமயம் மற்றும் கர்மங்களுக்கு அடிமையாகிவிட்ட பிறகும் கூட மனிதர்களிடத்தில் அபிமானம் அதிகமாக உள்ளது. சிலர் இப்படித்தான் உள்ளனர் - தன்னையே பகவான் என எண்ணிக் கொள்கின்றனர் அதாவது ஆத்மாதான் பரமாத்மா என்று நம்புகின்றனர். இது ஒரு கற்பனையான (பொய்யான) அபிப்பிராயம்.

பகவானே, ஓ பிரபு ஓ இறைவா.... என்ற இம்மாதிரியான வார்த்தைகளைக் கூறி அழைக்கின்றனர், ஆனாலும் அவரின் தெளிவான ரூபத்தை தெரிந்து கொள்ளவில்லை, பகவான் அதாவது பரமாத்மா எனப்படுவர் யார்? தாய், தந்தை முதலான சொற்களை கூறுவதால் மனதில் தனது தாய், தந்தை உருவம், சுபாவம், சம்மந்தம் முதலானவை கண் முன் தோன்றுகிறது. அதேபோல தன் தாயும் தந்தையுமாக ஏற்கப்பட்ட பரமாத்மாவை நினைவு கூறும் சமயத்தில் அவர்களின் மனத்திரையில் எவ்வித தெளிவான அறிமுகம் வெளிப்படுவதில்லை. பலர் பகவானை யதார்த்தமான பரிச்சயம் இல்லாத காரணத்தால் மத

ஸ்தாபனையாளர், தர்ம சாஸ்திரங்களை எழுதியவர் அல்லது ஒரு மதி நுட்பம் நிறைந்த மனிதனை, ஏதோ ஒரு தேவதையை பகவான் என்ற அடையாளம் தந்து விடுகின்றனர். உதாரணமாக பௌத்த தர்மத்தை பின்பற்றுவோர் புத்தரை பகவான் புத்தர் என்றும், ஜைன தர்மத்தினர் மகாவீரை பகவான் மகாவீர் என்றும், கிறிஸ்து தர்மத்தினர் கிறிஸ்துவை ஆண்டவர் என்றும் மற்றும் ஆதிசனாதன தர்மத்தை ஏற்றுக் கொள்பவர்கள் பகவான் கிருஷ்ணர், பகவான் ராம், பகவான் வியாசர், பகவான் சங்கர் என்றெல்லாம் கூறுகின்றனர். மேற்கண்ட அனைவருக்கும் பகவான் என்ற பதவியை அளிப்பது சரியா? அல்லது பகவான் என்ற சொல்லை இவர்களையெல்லோரையும் விட தனிப்பட்ட, வேறான எல்லோரையும் உயர்வான ஆத்மாவிற்கானது என்பது சரியா? என்ற கேள்வி எழுகிறது. பகவானுடைய குணம் மற்றும் சுய ரூபம் மற்றும் கடமைகள் என்ன? யாராவது அவருடையதைப் போல குணம், செயல்பாடுகள், இயல்பு (சுபாவம்), திறமை, உருவம் மற்றும் சம்மந்தம் முதலானவை கொண்ட ஒருவர் உள்ளாரா அவரை பகவான் என அறிந்து கொள்ள?

உண்மையில் பரமாத்மா ஒரு மிகப்பெரிய மகான் சக்தி. அவரை அன்பு நிறைந்த நினைவால் மட்டுமே மனிதர்களுக்கு அளவற்ற ஆனந்தம் பிராப்தி ஆகிறது. அவரிடமிருந்துதான் மனிதர்கள் நல்ல புத்தி (அறிவு, ஞானம்) மற்றும் சத்கதியை அடைய முடியும். பரமாத்மாவாகிய அவர் தான் காலன் மற்றும் கர்ம பந்தனங்களிலிருந்து விடுவிப்பவர். அதாவது மனிதர்களுக்குத் தேவையானது தன்னைப் பற்றி மற்றும் பரமபிரிய பரமபிதா பரமாத்மாவைப் பற்றிய உண்மையான அறிமுகத்தை தெரிந்து அதன் ஆதாரத்தில் பரமபிதாவோடு உறவை இணைத்து அதாவது யோகயுக்த் ( யோகம் நிறைந்த)தாக இருப்பதால் வாழ்க்கை விகாரமற்றதாகவும் ஆனந்தமயமானதாகவும் அமையக்கூடும்.

ஆகவே பரமாத்மா என்பவர் ஒருவரே. நாய்-பூனை, பாம்பு, தேள், திருடன்-கொள்ளையன், சாது-சந்நியாசி அனைவரையும் பகவான் என்ற எண்ணம் கொள்வது மிக மிக தவறான எண்ணமாகும். ஏனெனில் உண்மையில் அவர்கள் அனைவரும் பலவித பழக்க வழக்கங்கள், செயல்பாடுகள் மற்றும் பலனைப் பெறுகின்ற ஆத்மாக்கள் ஆவர். இவை அனைத்திலிருந்தும் தனிப்பட்டிருப்பவர் பரமாத்மா ஒருவரே. அவர் எல்லா மனிதர்களாலும் மேலான பூஜைக்குகந்தவர். ஜீவராசிகள் அநேகம், நரன்-நாரிகள் (ஆண்-பெண்கள்) அநேகம் பேர், சாது சந்நியாசிகள் அதிகமானோர், தேவி-தேவதைகளும் அநேகர், ஆனால் தேவ-தேவதைகளுக்கெல்லாம் தேவனாக இருப்பவர் பரமாத்மாவே, அவர்தான் எல்லோரையும் விட (சிரேஷ்டம்) தலையாய தந்தை பகவான். சாகார அதாவது மனித சரீரமுடைய ஆத்மாக்கள் பரமாத்மாவின் ரூபம் அல்ல. பரமாத்மா எல்லோரிடமிருந்தும் தனிப்பட்டவர், சரீரமற்றவர் (நிராகாரி) ஜோதி சொரூபமானவர், பிறப்பு-இறப்பற்றவர், ஒளிர்கின்ற ஒளி புள்ளியான சொரூபமுடைய சிவபரமாத்மா ஒருவர் தான். அவருடைய பூஜையை பாரத மக்கள் சிவலிங்க ரூபத்தில் செய்கின்றனர்.

## சிவபகவான் மகாவாக்கியம்


ஏ, குழந்தைகளே! நான் ஒருவனே - அநேகமான ஆத்மாக்களின் ஒரே தந்தையாக உள்ளவர் தான் சர்வவியாபியாக இருக்கின்றார் என்று சிலர் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர். அசைவில்லாமல் இணைந்தும், உணரமுடியாத அகண்ட ரூபத்தினால் அனைவர் மீதும் வியாபித்து இருப்பதன் காரணத்தால் பரமாத்மா ஒருவரே என அவர்கள் கூறுகின்றனர். உண்மையில் இவ்வாறு புரிந்து கொள்வது தவறாகும். ஏனென்றால் அனைவரிடத்திலும் வியாபித்திருக்கிறேன் என்பது கிடையாது அல்லது எல்லோரும் என்னிடத்தில் வியாபித்துள்ளனர் என்பதும் இல்லை,மாறாக நான் பரந்தாமத்தில் வசிப்பவன் அங்கிருந்து தான் இந்த சிருஷ்டியில் தர்மத்திற்கு நிந்தனை (ப்ரஷ்டம்) ஆகும் சமயத்தில் அவதரிக்கின்றேன். குழந்தைகளே! ஒருவேளை நான் எல்லோரிடத்திலும் வியாபித்திருக்கிறேன் என்றால் அனைத்து ஜீவராசிகளும் ஆனந்தம், சாந்தி மற்றும் அன்பு ஆகியவற்றால் நிறைவு பெற்றிருக்க வேண்டும், ஆனால் உங்களுக்கே தெரியும் உண்மை நிலை என்னவென்று. நான் இவையனைத்திலிருந்தும் தனிப்பட்டவன். அதர்மம் மற்றும் அசுர சம்பிரதாயத்தை விநாசம் செய்பவன், சத்தியமான தர்மத்தையும், தெய்வீக சம்பிரதாயத்தையும் ஸ்தாபனை செய்பவனாக உள்ளேன்.

ஆகவே நான் ஒருவனே -- நான் இதைக் கூறுவதன் உண்மையான அர்த்தம், பிற ஆத்மாக்கள் அனைவரும் சரீரதாரிகள், ஆனால் நான் ஒருவன் தான் ஜன்மம்- மரண மற்றவன், சுயம்பு அசரீரி. எல்லா ஆத்மாக்களும் ஏதேனும் ஒரு கர்மத்தின் பலனாக சரீரத்தைப் பெறுகின்றனர். ஆனால் நான் ஒருவன் தான் கர்மாதீத் நிலையில் உள்ளவன். எனவே நான் எந்த ஒரு சரீரத்தையும் எடுக்காத ஆத்மாவாகும்.

குழந்தைகளே! இவ்விதமாக என்னுடைய இந்த மகாவாக்கியங்களின் உண்மையான அர்த்தத்தைப் புரிந்து அனைவரும் என் ஒருவனின் சரணத்தை அடையுங்கள். ஏனென்றால் ஒரே தந்தையாகிய என்னிடமிருந்து தான் சம்பூரண தூய்மை, சுகம் மற்றும் சாந்தியின் ஈஸ்வரிய பிறப்புரிமையை பெற முடியும். மாமேகம் சரணம் வ்ரஜ் (சர்வ வல்லமை படைத்த என் ஒருவனிடம் சரணமடையுங்கள்) - இந்த சொற்களில் என்னுடைய கட்டளை என்னவோ அது மிகத் தெளிவாகின்றது. இதை கடைபிடிப்பதனால் தான் மனித ஆத்மாக்களுடைய நன்மை அடங்கியுள்ளது.



# நிராகார் பரமாத்மாவும் அவருடைய திவ்ய குணங்களும்




இனிமையான குழந்தைகளே! தன்னை ஆத்மா என உணர்ந்து, அனைத்து ஆத்மாக்களின் தந்தையான நிராகார பரம்பிதா பரமாத்மாவான என்னை நினைவு செய்யுங்கள். இதனால் உங்களின் பல பிறவிகளின் பாவங்கள் அழிந்து தூய்மையாகி சத்யுக சுகமான வாழ்க்கையை ஆஸ்தியாக அடைவீர்களாக..... பரம்பிதா சிவ பரமாத்மா